بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5 | இதழ் 37

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

21 முஹர்ரம் 1442 ஹிஜ்ரி கமரி 10 தபூக் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
10 செப்டம்பர் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰهَ يَاْمُرُكُمْ اَنْ تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰٓى اَهْلِهَا ۙ وَاِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ اَنْ تَحْكُمُوْا بِالْعَدْلِ ؕ

நீங்கள் அமானத்துகளை (நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை) அவற்றிற்குத் தகுதியானவர்களிடமே ஒப்படைக்கவேண்டுமென்றும், நீங்கள் மக்களுக்கிடையில் தீர்ப்பு வழங்கும்போது நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும் அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகின்றான். (4:59)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**எல்லாம் வல்ல இறைவன் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயரில் உலகில் அனுப்பியுள்ளான். எவர்கள் என்னை எதிர்க்கின்றார்களோ அவர்கள் என்னை எதிர்க்கவில்லை. மாறாக, இறைவனையே எதிர்க்கின்றார்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

## இறைவனால் அனுப்பப்பட்டவரை எதிர்க்கின்றவர்களின் ஈமான் பறிபோய் விடுகின்றது

நம்முடைய எதிரிகளின் நிலை எவ்வாறு இருக்கின்றதென்றால் அவர்களின் ஈமான் பறிபோய்விடக்கூடிய அபாயம் உள்ளது. ஏனென்றால் அவர்கள் நல்லவரை தீயவராகவும், பொய்யர் எனவும் கருதுகிறார்கள். அவ்வாறு செய்வதன் மூலம் இறைவனுடன் ஒரு போர் ஆரம்பித்து விடுகின்றது. எல்லாம் வல்ல இறைவன் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயரில் உலகில் அனுப்பியுள்ளான். எவர்கள் என்னை எதிர்க்கின்றார்களோ அவர்கள் என்னை எதிர்க்கவில்லை.

மாறாக, இறைவனையே எதிர்க்கின்றார்கள் என்பது மிகவும் தெளிவான ஒரு விஷயமாகும். ஏனென்றால் நான் மஸீஹ் என்று வாதம் செய்யாதவரை என்னை எதிர்க்கின்றவர்களில் அதிகமானோர் என்னை கௌரவத்துடன் பார்த்தார்க;ள். மேலும் தன்னுடைய கையினால் ஒளு செய்வதற்காக குவளையை எடுத்துக் கொடுப்பதை பலனுக்குறியதாகவும் பெருமைக்குரியதாகவும் எண்ணினார்கள்.

அவர்களில் பெரும்பாலோர் என்னிடம் பைஅத் செய்வதில் மிக அழுத்தம் கொடுத்து வந்தார்கள். ஆனால் இறைவனின் பெயரால் அதிகாரப்பூர்வமாக இந்த இயக்கத்தை நிறுவியதும் அதே மக்கள் என்னை எதிர்ப்பதற்காக எழுந்து நின்றார்கள். இதிலிருந்து அவர்களின் சொந்த விரோதமானது என்னுடன் அல்ல. மாறாக, இறைவனுடன்தான் அவர்களின் விரோதம் இருக்கின்றது என்பது மிகத் தெளிவாக தெரிகின்றது.

இறைவனுடன் அவர்களுக்கு உண்மையான தொடர்பு இருந்திருந்தால் அவர்களுடைய மார்க்கப்பற்று, இறையச்சம் மற்றும் இறைத் தொடர்பின் வெளிப்பாடு எவ்வாறாக இருக்க வேண்டும் என்றால் எல்லாவற்றிற்கும் முதலாக அவர்கள் என்னுடைய இந்த அறிவிப்பின் மீது லப்பைக் என்று கூறியவாறு இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் ஸஜ்தா செய்தவாறு என்னுடன் கை குலுக்கி இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. அவர்கள் தன்னுடைய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு என்னை எதிர்த்தார்கள். மேலும் அவர்கள் என்னை காஃபிர் என்றும் தஜ்ஜால் என்றும் மார்க்கத்திலிருந்து வெளியேறியவன் என்றும் கூறுமளவிற்கு எதிர்ப்பின் உச்சத்தை அடைந்து விட்டார்கள்.

அந்தோ பரிதாகம்! இந்த அறிவிலிகளுக்கு இது கூட தெரியவில்லை. எந்த நபர் இறைவனிடமிருந்து நிச்சயமாக நானே நம்பிக்கையாளர்களுள் முதன்மையானவன் ஆவேன் என எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது என நீர் கூறுவீராக. மேலும் நீ என்னிடத்தில் ஏகத்துவத்திலும், தனிமைத்துவத்திலும் என்னுடைய அந்தஸ்தில் இருக்கின்றாய் என்ற ஓசையை கேட்டுள்ளாரோ அவர் இறைவனின் ஏச்சுப் பேச்சுக்கள் மற்றும் தீய வார்த்தைகளை ஏன் பொருட்படுத்தப் போகிறார்.

இந்த அறிவீனர்கள் குஃப்ர் மற்றும் ஈமானுடைய தொடர்பு உலகத்தோடு இல்லை. மாறாக, இறைவனோடுதான் இருக்கின்றது என்பதைக்கூட அறியாமல் இருக்கின்றார்களோ என்பதுதான் வருத்தத்திகுரிய விஷயமாகும். மேலும் எல்லாம் வல்ல இறைவன் நான் முஃமின் என்றும் இறைவனால் அனுப்பப்பட்டவன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றான். அவ்வாறு இருக்கும்போது வீண் விவாதம் செய்பவர்களை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்?

ஆக இவ்விஷயங்களிலிருந்து மக்கள் என்னை எதிர்க்கவில்லை. மாறாக, எல்லாம் வல்ல இறைவனின் கூற்றைதான் அவர்கள் எதிர்க்கின்றார்கள் என்ற மிக தெளிவாக விளங்குகிறது. இதன் காரணமாகத்தான் இறைவனால் அனுப்பப்பட்டவரை எதிர்த்தவர்களின் ஈமான் பறிபோய் விடுகின்றது. என்னை எதிர்க்கின்றவர்கள் இறைவனை எதிர்க்கின்றார்கள் என்பது தற்போது மிகவும் தெளிவாகி விட்டது. நான் ஒளியின் பக்கம் வருகின்றேன். மேலும் நான் ஒளியை நோக்கி வந்து கொண்டே இருக்கின்றேன் என்பது உறுதியான ஒன்றாகும். ஏனென்றால் எல்லாம் வல்ல இறைவனின் எண்ணற்ற அடையாளங்கள் எனக்கு ஆதரவாக வெளிப்படுகின்றது. மேலும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். விண்ணிலிருந்து பொழிகின்ற மழை போன்று இந்த அடையாளங்கள் இறங்கிக் கொண்டே இருக்கும்.

அவ்வாறே என்னுடைய எதிரிகள் இருளின் பக்கம் செல்கின்றார்கள் என்பதும் உறுதியான விஷயமாகும். ஒளி மற்றும் வெளிச்சம் தூய ஆன்மாவை கொண்டு வரும். மேலும் இருள் ஷய்த்தானின் நெருக்கத்தை ஏற்படுத்தும். இவ்வாறாக இறைநேசரை எதிர்ப்பது ஈமானை முற்றுப்பெற செய்கின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 175 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போர் நடைபெற்ற காலகட்டத்தில் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் இளைஞராக இருந்தார்கள். பிறகு அவர்களின் மூலமாகவே ஈரான் வெற்றி கொள்ளப்பட்டது. மேலும் கூஃபாவையும், ஈராக்கையும் நிறுவியவராக அன்னார் திகழ்ந்தார்கள். ஆனால் அவர்களது பார்வையில் பத்ர் போரில் கலந்து கொண்டதனால் அவர்களுக்கு கிடைத்த கண்ணியம் மற்றும் பெருமிதத்திற்கெதிரில் இந்த கண்ணியமும், பெருமிதமும் முற்றிலும் ஒன்றுமற்றதாகும்**

**ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவரும், மக்காவின் காலகட்டத்தில் துன்பங்களை சகித்துக் கொண்டவரும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய நற்பாக்கியத்தைப் பெற்றவரும், இஸ்லாத்திற்காகவும், கிலாஃபத்திற்காகவும் தன்மான உணர்வைக் வெளிப்படுத்தியவரும், இஸ்லாத்தின் குதிரை வீரர் என்று அழைக்கப்பட்டவரும், ஈராக்கை வெற்றி கொண்டவரும், பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**மதிப்பிற்குரிய ஸஃப்தர் அலி குஜ்ராத்தி சாஹிப், பேராசிரியர் மர்ஹூம் நஸீர் அஹ்மது கான் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய இஃபத் நஸீர் சாஹிபா, மதிப்பிற்குரிய அப்துர் ரஹீம் சாகீ சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய சயீத் அஹ்மது சஃகல் சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துக் கூறி ஹுஸூர் அவர்கள் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டண் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 ஆகஸ்ட் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **14 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த இரண்டு ஜுமுஆக்களுக்கு முன்பு சஹாபாக்களைப் பற்றி நான் கூறியபோது அதில் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களைப் பற்றி கூறினேன். அவர்களைக் குறித்தே இன்றும் மேற்கொண்டு விஷயங்களை எடுத்துக் கூறுவேன். போர் பற்றி நாம் பார்த்து வந்தோம். போரின்போது ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுடைய மனைவி ஹஸ்ரத் சல்மா பின் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு இருந்த ஒரு கைதி ஏக்கத்துடன் அந்தப் போரில் பங்கு பெற விருப்பம் கொண்டிருந்ததைக் கண்டார்கள்.

அந்த கைதியின் பெயர் அபூ மஹஜன் சக்ஃபீ ஆகும். அவர் மது அருந்திய காரணத்தினால் ஹஸ்ரத் உமர் அவர்கள் நாடு கடத்தி தண்டனை அளித்திருந்தார்கள். அவர் இங்கு வந்து சேர்ந்திருந்தார். இங்கு வந்த பிறகும் அவர் மது அருந்திய காரணத்தினால் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் அவருக்கு கசையடி தண்டனை வழங்கியிருந்தார்கள். மேலும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு இருந்தார். அபூ மஹஜன் அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களின் அடிமைப் பெண் சுஹ்ராவிடம் எனது சங்கிலிகளை திறந்து விடுங்கள். நான் போரில் கலந்து கொள்ள ஆசை கொள்கிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உயிர் தப்பி விட்டால் திரும்ப வந்து சங்கிலியை அணிந்து கொள்வேன் என்று கூறினார்.

அந்த அடிமைப் பெண் அவருடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டாள். மேலும் சங்கிலிகளை அவிழ்த்து விட்டாள். அபூ மஹஜன் அவர்கள் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுடைய குதிரையில் சவாரி செய்து யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த மைதானத்தை நோக்கி சென்றார்கள். எதிரிகளுடைய வரிசைகளை கிழித்துக் கொண்டு நேராகச் சென்று பெரிய வெள்ளை யானை மீது தாக்குதல் தொடுத்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் இந்த அனைத்தையும் பார்த்துக கொண்டிருந்தார்கள். இது என்னுடைய குதிரை ஆயிற்றே! ஆனால் அதில் சவாரி செய்வது அபூ மஹஜன் சக்ஃபீ போன்று தெரிகிறதே என்றார்கள்.

ஏற்கனவே முன்பு கூறப்பட்டதுபோன்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் நோயின் காரணமாக அந்தப் போரில் நேரடியாக கலந்து கொள்ளவில்லை. தூரத்திலிருந்து கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் போர் மூன்று நாட்கள் நடைபெற்றது. போர் முடிந்தவுடன் அபூ மஹஜன் சக்ஃபீ அவர்கள் திரும்பி வந்து தனது சங்கிலியை அணிந்து கொண்டார். நீங்கள் மறுபடியும் மது அருந்தக்கூடாது. அவ்வாறு அருந்தினால் உங்களுக்கு நான் கடுமையான தண்டனை தருவேன் என்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அபூ மஹஜன் அவர்களைப் பார்த்து கூறி அவரை விட்டு விட்டார்கள். இனி நான் ஒருபோதும் மது அருந்த மாட்டேன் என்று அபூ மஹஜன் அவர்கள் வாக்குறுதி தந்தார்கள்.

இன்னொரு அறிவிப்பில் எவ்வாறு வருகிறது என்றால், ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அனைத்து விஷயங்களையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதி அனுப்பினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இனி இவர் மதுவிலிருந்து பாவமன்னிப்பு தேடிக் கொள்வார் என்றால் அவருக்கு தண்டனை கொடுக்க வேண்டாம் என்று கூறினார்கள். இதன் அடிப்படையில் இனிமேல் மது அருந்த மாட்டேன் என்று அபூ மஹஜன் சத்தியம் செய்தார். ஆகவே ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அவர்களை விடுதலை செய்தார்கள்.

(பஷீர் சாஜித் அவர்கள் எழுதிய அஷ்ரா முபஷ்ஷிரா பக்கம் 850–851)

இந்த சம்பவம் குறித்த விளக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதி இருக்கிறார்கள். அபூ மஹஜன் அவர்களை அடிமைப்பெண் விடுவித்து விட்டாள் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் ஹஸ்ரர் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியிருக்கிறார்கள். ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்பான தோழர்களுள் ஒருவராக இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் தம்முடைய கிலாஃபத் காலகட்டத்தில் அவரை ஈரானிய படைக்கு எதிராக இஸ்லாமிய படைக்குத் தளபதியாக நியமித்து இருந்தார்கள். ஏதேச்சையாக அவருடைய தொடையில் ஒரு கட்டி வந்தது. அதை இங்கு கம்பீர் என்று கூறுகிறார்கள்.

அது நீண்ட காலமாக இருந்தது. எவ்வளவோ சிகிச்சை செய்தும் எவ்வித பலனும் இல்லாமல் இருந்தது. இறுதியில் அவர்கள் என்ன நினைத்தார்கள் என்றால் நான் கட்டிலில் படுத்திருந்தால் படைத் தளபதி தம்முடன் இல்லை என்பதை படை பார்க்கும்; அவர்கள் மனமுடைந்து போவார்கள். ஆகவே ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஒரு மரத்தின் மீது மிக உயர்வான மேடை ஒன்றை அமைத்தார்கள். நமது ஊர்களில் தோட்டங்களை பாதுகாப்பதற்காக இவ்வாறு அமைக்கப்படுவது உண்டு. முஸ்லிம்களுடைய படை அன்னாரை கண்டு வரவும், தளபதி தம்மிடம்

இருப்பதாக அவர்கள் நினைத்துக் கொள்ளும் வகையிலும் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் மக்களுடைய உதவியுடன் அதில் அமர்ந்து கொள்வார்கள். அந்நாட்களில்தான் ஒரு அரபு தலைவர் மது அருந்தியதாக அன்னாருக்கு தகவல் வந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: இஸ்லாத்தில் மது ஹராம் ஆக இருந்தது. ஆனால் அரபு மக்கள் அதற்கு நன்கு பழக்கப்பட்டவர்களாக ஆகியிருந்தார்கள். ஒரு பழக்கம் ஏற்பட்டுவிட்டால் அது மிக கஷ்டமாகத்தான் விட்டுப் போகின்றது. அந்த தலைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு 2,3 வருடங்கள்தான் கழிந்திருந்தன. பழைய பழக்க வழக்கமாக இருக்கும்போது இரண்டு மூன்று வருடத்தில் அந்த பழக்க வழக்கம் போகாது.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுக்கு அந்த முஸ்லிம் அரபு தலைவரைப் பற்றிய தகவல் கிடைத்தது. அவர் மது அருந்திய காரணத்தினால் அன்னார் அவரை கைது செய்திருந்தார்கள். அந்நாட்களில் முறையாக சிறைச்சாலை கிடையாது. ஒருவரை கைது செய்வது நோக்கமாக இருக்கும் என்றால் அவரை ஒரு அறைக்குள் பூட்டி வைத்து விடுவார்கள். கண்காணிப்பதற்காக ஆட்களை நியமித்து விடுவார்கள். ஆகவே அந்த முஸ்லிம் அரபு தலைவரையும் ஒரு அறைக்குள் அடைத்து விட்டார்கள். வாசலில் காவலுக்காக ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள். அந்த ஆண்டு இஸ்லாமிய வரலாற்றில் சோதனை ஆண்டு என அழைக்கப்படுகின்றது.

ஏனென்றால் போரில் முஸ்லிம்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. போரில் ஓரிடத்தில் முஸ்லிம் படையிடையே குதிரைகள் எதிரிகளுடைய யானைகளை கண்டு மிரண்டு அருகிலுள்ள ஒரு நதியில் குதித்து விட்டன. அரபு மக்களுக்கு நீந்த தெரியாது. ஆகவே ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் மூழ்கி இறந்து போயினர். ஆகவே அந்த வருடத்தை சோதனையின் வருடம் என்று அழைக்கின்றனர். எவ்வாறிருப்பினும் அந்த முஸ்லிம் அரபு தலைவர் அறையில் கைதாகி இருந்தார். முஸ்லிம் வீரர்கள் போரில் இருநது திரும்பி வந்து அந்த அறைக்கு அருகில் அமர்ந்து போரில் முஸ்லிம்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது என்று பேசிக் கொண்டிருந்தார்கள். கைதாகி இருந்த அவரோ இப்பொழுது போரில் பங்கு பொள்ள இயலாமல் போய்விட்டதே! என்று மிகவும் பரிதாபத்தோடு உள்ளுக்குள்ளே ஏங்கிக் கொண்டிருந்தார்.

சந்தேகத்திற்கிடமின்றி அவரிடத்தில் பலவீனம் இருந்தது. அவர் மது அருந்தி இருந்தார். ஆனால் அவர் பெரும் வீரராக இருந்தார். அவரிடத்தில் உத்வேகம் காணப்பட்டது. போரில் முஸ்லிம்கள் அடைந்த நஷ்டங்களை பற்றி கேட்ட பிறகு கூட்டுக்குள் சிங்கம் உலாவுவதைப் போன்று அறைக்குள் அவர் உலாவிக் கொண்டிருந்தார். மேலும் உலாவியவாறே ஒரு கவிதையும் படித்தார். அந்த கவிதையின் பொருள் என்னவென்றால், இன்றுதான் நீ இஸ்லாத்தை காப்பாற்றக்கூடிய தருணமாகும். உம்முடைய வீர சாகசத்தை காட்டக்கூடிய தருணமாகும். ஆனால் நீயோ கைதியாக இருக்கின்றாய்.

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின் மனைவி பெரும தைரியமிக்க பெண்மணியாக இருந்தார்கள். ஒரு நாள் அவர்கள் அந்த அறையை கடந்து செல்லும்போது அவர்கள் அந்த கவிதையை கேட்டார்கள். அங்கு காவலாளி இல்லாததை கண்டார்கள். அவர்கள் அந்த அறைக் கதவை நெருங்கி, அந்த கைதியை பார்த்து உங்களை ஹஸ்ரத் சஅத் அவர்கள் கைது செய்து இருப்பதை நீங்கள் அறிவீர்களா? நான் உங்களை விடுதலை செய்தால் அவர் என்னை ஒருபோதும் விட மாட்டார். ஆனால் உங்கள் விடுதலை செய்ய எனது உள்ளம் நாடுகிறது. இதன் மூலமாக நீங்கள் உங்களது விருப்பத்திற்கேற்ப இஸ்லாத்திற்கு உபயோகம் செய்யலாம் என்று கூறினார்கள்.

போர் நடைபெறும்போது என்னை நீங்கள் விடுவித்து விடுங்கள். போருக்குப் பிறகு உடனடியாக நான் திரும்பி இந்த அறைக்குள் வந்து விடுவேன் என்று அந்தக் கைதி வாக்குறுதி கொடுத்தார். அந்த பெண்மணியினுடைய உள்ளத்திலும் இஸ்லாத்திற்காக வேதனை இருந்தது. இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக உத்வேகம் காணப்பட்டது. ஆகவே அவர்கள் அந்த மனிதரை விடுவித்தார்கள். அவர் போரில் கலந்து கொண்டார். மேலும் எந்த அளவு அஞ்சாமல் போர் செய்தார் என்றால் அவருடைய வீரத்தின் காரணமாக இஸ்லாமிய படை பின் வாங்குவதற்கு பதிலாக முன்னேறியது.

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அவரை அடையாளங்கண்டு கொண்டார்கள். மது அருந்தியதன் காரணமாக நான் சிறை செய்த மனிதரும் இன்றைய போரில் இருந்தார். அவர் தனது முகத்தை திரையிட்டு இருந்தார். ஆனால் அவர் போர் செய்யக்கூடிய முறை மற்றும் அவருடைய உயரத்தைக் கொண்டு நான் அவரை அடையாளம் கண்டு கொண்டேன். அந்த நபரை சிறையிலிருந்து விடுவித்த நபரை தேடிச்சென்று நான் அவருக்கு கடும் தண்டனை கொடுப்பேன் என்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதாவது எவர் அவரை விடுவித்து வெளியே அனுப்பினாரோ, அவரது சங்கிலிகளை அவிழ்வித்தாரோ அவருக்கு கடும் தண்டனை கொடுப்பேன் என்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ருத் சஅத் (ரலி) அவர்கள் இந்த சொற்களை கூறியவுடன் அவரது மனைவிக்கு கோபம் வந்துவிட்டது. அவரது மனைவி அவரைப் பார்த்து, உங்களுக்கு வெட்கம் இல்லையா? நீங்கள் மரத்தில் மேடை அமைத்து உட்கார்ந்திருக்கிறீர்கள். எதிரியினுடைய படைக்குள் அச்சமின்றி நுழையக்கூடிய, தனது உயிரைப் பற்றி அக்கறை கொள்ளாத ஒரு மனிதரை நீங்கள் சிறையில் அடைத்து இருக்கிறீர்கள். நான்தான் அந்த மனிதரை சிறையிலிருந்து விடுவித்தேன். நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

எப்படி இருந்தபோதிலும், இந்த விளக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பெண்களுக்கு ஆற்றிய ஒரு சொற்பொழிவில் எடுத்துக் கூறினார்கள். பெண்கள் இஸ்லாத்திற்காக பெரும் பெரும் பணிகளை செய்துள்ளார்கள். ஆகவே இன்றும் அஹ்மதிய்ய பெண்கள் இந்த முன்மாதிரிகளை தமக்கு முன்னால் வைக்க வேண்டும் என்று அன்னார் கூறினார்கள்.

(குரூனே ஊலா கி முஸல்மான் ஹவாதீன் கா நமூனா,
அன்வாருல் உலூம் தொகுதி 25 பக்கம் 428–430)

பெண்களுடைய தியாகங்கள் தொடர்பாக இன்னும் சம்பவங்களை கேளுங்கள். இதுவும் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுடன் தொடர்புடைய சம்பவங்களாகும். பனூ சுலைம் என்ற அன்ஸாருடைய கோத்திரத்தில் பிரபல்யமான பெண் கவிஞர் மற்றும் சஹாபியா ஹஸ்ரத் கன்ஸா அவர்கள் அந்தப் போரில் தனது நான்கு மகன்களை அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்தார்கள். அவருடைய கணவரும் சகோதரரும் தமது இளமைப் பருவத்தில் மரணமடைந்திருந்தார்கள். ஹஸ்ரத் கன்ஸா (ரலி) அவர்கள் பெரும் கடினத்துடன் தமது குழந்தைகளை வளர்த்தார்கள்.

காதிஸிய்யா போரின் கடைசி நாள் காலையில் போருக்கு முன்பு அவர்கள் தமது மகன்களைப் பார்த்து, எனது மகன்களே! நீங்கள் மன மகிழ்ச்சியுடன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டீர்கள். மேலும் தமது விருப்பத்துடன் ஹிஜ்ரத் செய்தீர்கள். எந்த இறைவனைத்தவிர வேறு இறைவன் இல்லையேலா அந்த இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்! உங்களுடைய பரம்பரை மாசற்றது. உங்களுடைய குலம் குற்றமற்றது. மறுமையின் வீடு இந்த அழிந்து போகும் உலகத்தை விட மிகச் சிறந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

மகன்களே! உறுதியாக இருங்கள். நிலையாக நில்லுங்கள். தோளோடு தோள் சேர்த்து போர் செய்யுங்கள். இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். ஆவேசமாக போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனுடைய நெருப்பு கொழுந்து விட்டு எரிகிறது. குதிரை படை வீரர்கள் தமது நெஞ்சை நிமிர்த்தி உள்ளார்கள். ஆகவே நீங்கள் உங்கள் மறுமையை சீர் செய்வதற்காக அதில் குதியுங்கள்.

அதாவது ஹஸ்ரத் கன்ஸா (ரலி) அவர்களுடைய மகன்கள் அவருடைய வஸிய்யத்தின்படி செயல்பட்டவாறு போர்க் களத்தில் குதித்தார்கள். வீரத்துடன் போரிட்டவாறு ஷஹீதாகி விட்டார்கள். அந்த நாளில் மாலைக்கு முன்பாகவே காதிஸிய்யாவில் இஸ்லாமிய கொடி பறந்து கொண்டிருந்தது. உங்களுடைய நான்கு மகன்களும் ஷஹீதாகி விட்டார்கள் என்று கன்ஸா அவர்களிடம் கூறப்பட்டது. அப்போது அவர்கள், அல்லாஹ்வுக்கு நன்றி! அல்லாஹ் அவர்களுக்கு ஷஹாதத்தை அருளினான். எனக்கும் எந்த விதத்திலும் குறைந்த பெருமை கிடையாது. அவர்கள் உண்மையான வழியில் தியாகமாகிப் போனார்கள். அல்லாஹ் எங்களை தனது அருளின் நிழலில் நிச்சயமாக ஒன்று சேர்ப்பான் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்று கூறினார்கள்.

காதிஸிய்யாவை வெற்றி கொண்ட பிறகு இஸ்லாமிய படை பாபிலோனையும் வெற்றி கொண்டது. பாபிலோன் என்பது தற்போதைய ஈராக் உடைய பழைய நகரம் ஆகும். ஹாரூத் மாரூத் தொடர்பாக திருக்குர்ஆனில் வரும்போது இது குறித்த குறிப்பு கூறப்பட்டுள்ளது. தற்போது கூஃபா நகரம் இருக்கக்கூடிய இடத்தில்தான் அந்நகரம் இருந்தது. நகரங்களைப் பற்றிய குறிப்பில் இந்த நகரைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. இந்த இடத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நம்ரூது சிறைப்பிடித்து வைத்திருந்தான். அந்த காலம் வரை அந்த சிறைச்சாலையும் பாதுகாப்பாக இருந்தது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அங்கு சென்றபோது அந்த சிறைச்சாலையைப் பார்த்தார்கள். மேலும் திருக்குர்ஆனுடைய இந்த வசனத்தை ஓதினார்கள்

وَتِلْكَ الْاَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ

அதாவது அவர்கள் அறிவுரைகளை பெறும் பொருட்டு இந்நாட்களை நாம் மக்களிடையே மாறி மாறி வரச் செய்கின்றோம் **(3:141)**

அன்னார் கூஃபாவை விட்டு முன்னேறும்போது பெஹ்ரா ஷேர் என்ற பெயருடைய இடத்தை அடைந்தார்கள். இது குறித்த விபரத்தை நகரங்களுடைய விளக்கத்தில் அதனுடைய பெயர் பஹூரே சேர் என்றும் எழுதப்பட்டுள்ளது. இது தஜல்லா நதியினுடைய மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஈராக்கினுடைய மதாயின் நகரத்திற்கு அருகில் உள்ள பாத்தாத்தினுடைய புறநகர் பகுதியில் உள்ள ஓர் இடத்தின் பெயர் ஆகும். இங்கு கிஸ்ராவுடைய வேட்டை சிங்கம் இருந்தது.

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுடைய படை நெருங்கியவுடன், அவர்கள் இந்த கொடூர விலங்களை படைக்குள் விட்டு விட்டார்கள். அந்த சிங்கம் கர்ஜித்தவாறு படையை தாக்கியது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுடைய சகோதரர் ஹாஷிம் பின் அபீ வக்காஸ் அவர்கள் முதல் காலாட் படை பிரிவினுடைய அதிகாரியாக இருந்தார்கள். அவர்கள் சிங்கத்தின் மீது வாள் வீசினார்கள். சிங்கம் அங்கேயே மாண்டு போனது. பிறகு அந்த ஊரிலேயே மதாயினுடைய போர் நடைபெற்றது. மதாயின் என்ற ஊர் கிஸ்ராவுடைய தலைநகரமாக இருந்தது. இங்கு அவனுடைய வெள்ளை அரண்மனைகள் இருந்தன. முஸ்லிம்களுக்கும் மதாயினுக்கும் இடையில் தஜ்லா நதி குறுக்கிட்டது. ஈரானியர்கள் நதிகளிலுள்ள பாலங்களை எல்லாம் இடித்திருந்தார்கள்.

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் படையினரிடம், முஸ்லிம்களே! எதிரிகள் நதியை புகலிடமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். வாருங்கள்! நீந்தி நதியை கடப்போம் என்று கூறியவாறு அவர்கள் தனது குதிரையை நதியில் இறக்கினார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுடைய படை வீரர்கள் தமது தளபதியை பின்பற்றியவாறு குதிரையை நதியில் இறக்கினார்கள். இஸ்லாமிய படைகள் நதியை கடந்து சென்றன. ஈரானியர்கள் ஆச்சரியம் மிகுந்த இக்காட்சியை கண்டவுடன் அச்சத்தில் கூச்சலிட்டார்கள். அரக்கர்கள் வந்து விட்டார்கள்; அரக்கர்கள் வந்து விட்டார்கள் என்று ஓடினார்கள். முஸ்லிம்கள் முன்னேறிச் சென்று நகரத்தையும் கிஸ்ராவுடைய மாளிகைகளையும் கைப்பற்றினார்கள்.

இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அஹ்ஸாப் போரின்போது அகழ் தோண்டும்போது இடைப்பட்ட ஒரு கல்லை உடைக்கும்போது கூறி அந்த முன்னறிவிப்பு நிறைவேறியது. அதாவது மதாயினுடைய வெள்ளை மாளிகைகள் விழுவதை நான் காண்கிறேன் என்று கூறினார்கள். இந்த மாளிகைகளை வெறிச்சோடிய நிலையில் கண்ட ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் இந்த வசனங்களை ஓதினார்கள்.

كَمْ تَرَكُوْا مِنْ جَنّٰتٍ وَّعُيُوْنٍ ﴿٢٦﴾ وَّزُرُوْعٍ وَّمَقَامٍ كَرِيْمٍ ﴿٢٧﴾
وَّنَعْمَةٍ كَانُوْا فِيْهَا فٰكِهِيْنَ ﴿٢٨﴾ كَذٰلِكَ ۖ وَاَوْرَثْنٰهَا قَوْمًا اٰخَرِيْنَ ﴿٢٩﴾

அதாவது அவர்கள் தங்களுக்கு பின்னர் எத்தனையோ தோட்டங்களையும், நீரூற்றுகளையும் விட்டுச் சென்றனர். வயல்களையும், கண்ணியத்திற்குரிய இடங்களையும், அவர்கள் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்த சுகபோகங்களையும் விட்டுச் சென்றனர். இவ்வாறே நிகழ்ந்தது. நாம் இவையெல்லாவற்றிற்கும் மற்றொரு சமுதாயத்தினரை வாரிசாக ஆக்கினோம். **(44:26–29)**

எப்படி இருந்தபோதிலும், அதன் பிறகு ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடத்தில் கடிதம் எழுதி மேலும் முன்னேறுவதற்கான அனுமதியை வேண்டினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தற்போது இங்கேயே நிறுத்திக் கொள்ளலாம். வெற்றி கொண்ட இடங்களை ஒழுங்குபடுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துமாறு கூறினார்கள்.

ஆகவே ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் மதாயினை தலைமை இடமாக ஆக்கி ஒழுங்குபடுத்த ஆரம்பித்தார்கள். மேலும் இப்பணியை சிறப்பாக செய்தார்கள். ஈராக்கினுடைய மக்கள் தொகை கணக்கீடு எடுக்கப்பட்டது. மதிப்பீடு செய்யப்பட்டது. பொது மக்களுடைய வசதிகளுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. மேலும் தனது அழகிய சிந்தனை மற்றும் அழகிய செயலின் மூலமாக அல்லாஹ் அன்னாருக்கு போர் திறனுடன் நிர்வாகத் திறனையும் வழங்கியதை நிரூபித்தார்கள். பொது மக்கள் முஸ்லிம்கள் வெற்றி கொண்டால் தம்மை கண்டு கொள்ள மாட்டார்கள் என்று நினைத்திருந்தார்கள். ஆனால் முஸ்லிம்கள் நகரத்தை வெற்றி கொண்ட பிறகு அங்கு வசிக்கக்கூடியவர்கள் முன்பை விட அதிகமாக கவனத்தில் கொள்ளப்பட்டார்கள்.

இதன் பிறகு கூஃபா நகரத்திற்கான அடித்தளம் இடப்பட்டது. மதாயினுடைய தட்பவெப்ப நிலை அரேபியர்களுடைய இயல்புக்கு ஏற்ப பொருந்தவில்லை. ஆகவே ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய அனுமதியுடன் ஒரு புதிய நகருக்கான அடித்தளம் இட்டார்கள். அதில் பல்வேறு அரபு கோத்திரங்களை தனித்தனி வட்டாரத்தில் வசிக்கச் செய்தார்கள். நகரின் நடுவில் மிகப்பெரிய பள்ளிவாசலைக் கட்டினார்கள். அதில் ஒரே நேரத்தில் 40 ஆயிரம் பேர் தொழ முடியும். கூஃபா என்பது உண்மையில் ராணுவ முகாமாக இருந்தது. பிறகு அதில் ஒரு லட்சம் படை வீரர்கள் குடியமர்த்தப்பட்டார்கள்.

இதன் மேற்கொண்ட விளக்கம் என்னவென்றால், ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஒரு நீண்ட காலமாக மதாயினில் வசித்த பிறகு இங்குள்ள காற்று, நீர் போன்றவை அரபு மக்களுடைய தோற்றத்தையும், நிறத்தையும் மாற்றியதை உணர்ந்தார்கள். இது குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தகவல் தெரிவித்தார்கள். அரேபிய எல்லைப் புறத்தில் ஒரு தகுந்த இடத்தை கண்டறிந்து அங்கு ஒரு புதிய நகரத்தை உருமாக்குமாறும், அரேபிய கோத்திரங்களை அங்கு குடியமர்த்தில அதை தலைமையக ஆட்சிபீடமாக ஆக்குமாறு கட்டளை வந்தது.

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் இந்த கட்டளைக்கேற்ப மதாயினில் இருந்து வெளியேறி தகுந்த ஒரு இடத்தை தேர்ந்தெடுத்தார்கள். அங்கு கூஃபா என்ற பெயரில் ஒரு பெரும் நகரத்திற்கான அடிக்கல் வைத்தார்கள். பல்வேறு அரேபிய கோத்திரங்களை தனித்தனி வட்டாரம் ஆக அங்கு தங்க வைத்தார்கள். ஊரின் நடுவில் ஒரு மிகப்பெரும் பள்ளிவாசலைக் கட்டினார்கள். அதில் ஏறக்குறைய 40 ஆயிரம் தொழுகையாளிகள் தொழுவதற்கான இட வசதி செய்யப்பட்டிருந்தது. பள்ளிவாசலுக்கு அருகிலேயே பைத்துல் மாலின் கட்டடத்தையும் தனது மாளிகையையும் கட்டினார்கள். அது சஅதின் மாளிகை என்று பெயரால் பிரபல்யமானது.

(ரோஷன் சிதாரே பக்கம் **84–88** & சீரத்துஸ் சஹாபா தொகுதி **2** பக்கம் **117,118** & மஜ்மவுல் பல்தான் பக்கம் **56** & மஜ்மவுல் பல்தான் தொகுதி **1** பக்கம் **610)**

அதன் பிறகு நஹாவந்த் என்ற போர் நடைபெற்றது. அதாவது **21** ஆம் ஹிஜ்ரியில் ஈரானியர்கள் பராசீகர்களின் கைவசம் இருந்த ஈராக்கினுடைய பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராக போருக்கு

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

மனிதன் உண்மையான முறையில் இறைவனிடம் அன்பு செலுத்தும் போது இறைவனும் அவனிடம் அன்பு செலுத்துகின்றான்.

(ஹகீகதுல் வஹி, ருஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 65)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

ஆயத்தமானார்கள். மேலும் முஸ்லிம்கள் வெற்றி கொண்ட பகுதிகளை திரும்ப பெறுவதற்காக நஹாவந்த் என்ற இடத்தில் ஒன்றை இலட்சம் படை வீரர்களை முஸ்லிம்களுக்கு எதிராக போரிட ஈரானியர்கள் ஒன்றுதிரட்டியிருந்தார்கள்.

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடத்தில் இது குறித்து தகவல் அளித்ததும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆலோசனை கூறுபவர்களின் ஆலோசனைக்கிணங்கள ஹஸ்ரத் நுஃமான் பின் முகர்ரின் முஸ்னீ என்ற ஒரு ஈராக்கிய முஸ்லிமை படை தளபதியாக நியமித்தார்கள். ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் அப்பொழுது கஸ்கர் என்ற இடத்தில் இருந்தார்கள்.

கஸ்கர் என்பது நஹ்ர்வானில் இருந்து பஸ்ராவின் அருகில் உள்ள தஜல்லா நதியின் துறைமுகம் வரை உள்ள இடமாகும். அதில் 20–க்கும் மேற்பட்ட கிராமங்களும், ஊர்களும் இருந்தன. எப்படி இருந்தபோதிலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை நஹாவந்த் சென்றடையுமாறு கட்டளையிட்டார்கள். ஒன்றரை இலட்சம் ஈரானிய படைப்பிரிவை சுற்றிப் பார்த்து ஆராய்ந்த பிறகு அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கினார்கள்.

அதன் பிறகு நான் ஷஹீதாகி விட்டால் இந்த படைக்கு ஹுஸைஃபா அவர்கள் தளபதியாக இருப்பார்கள். அவர்கள் ஷஹீதாகி விட்டால் இன்ன நபர் படைக்கு தளபதியாக இருப்பார் என்று ஏழு நபர்கள் வரை நியமித்தார்கள். அதன் பிறகு, அல்லாஹ்வே! உனது மார்க்கத்திற்கு கண்ணியம் அளிப்பாயாக. உனது அடியார்களுக்கு உதவி புரிவாயாக. மேலும் நுஃமானிற்கு முதலில் ஷஹாதத்தை வழங்குவாயாக என்று அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள்.

இன்னொரு அறிவிப்பின் அடிப்படையில் அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்: அதாவது அல்லாஹ்வே! நான் என்னிடம் வேண்டுவது என்னவென்றால், இன்று எப்படிப்பட்ட வெற்றியைக் கொண்டு எனது கண்களுக்கு குளிர்ச்சியை வழங்க வேண்டும் என்றால் அதில் இஸ்லாத்தினுடைய கண்ணியம் இருக்க வேண்டும். மேலும் எனக்கு நீ ஷஹாதத்தை வழங்குவாயாக என்று துஆ செய்தார்கள்.

போர் ஆரம்பித்ததும் முஸ்லிம்கள் எந்த அளவு வீரத்துடன் போர் செய்தார்கள் என்றால் சூரியன் மறைவதற்கு முன்பே போர்க்களம் முஸ்லிம்களுடைய கைகளுக்கு வந்து விட்டது. மேலும் அந்தப் போரில் ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். அபூ லுஃலுஃ என்பவன் அதே போரில் சிறைபிடிக்கப்பட்டு, அவன் அடிமையாக ஹஸ்ரத் முகீரா பின் ஷுஃபா அவர்களுடைய பங்கில் வந்தான். அபூ லுஃலுஃ என்ற இம்மனிதன் யார் என்றால், பிற்காலத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து அன்னாரை ஷஹீதாக்கியவன் ஆவான்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நஹாவந்தின் அமீருக்கு கடிதம் எழுதினார்கள். முஸ்லிம்களுக்கு அல்லாஹ் வெற்றியை வழங்கினால் ஐந்தில் ஒரு பகுதியை பைத்துல் மாலுக்கு வைத்து விட்டு மற்ற அனைத்து போர்ச் செல்வங்களையும் முஸ்லிம்களிடத்தில் பங்கிட்டுக் கொடுத்து விடுங்கள். மாறாக, இந்த படை அழிந்து விட்டால் பிறகு எந்த எச்சமும் தேவையில்லை. ஏனென்றால் பூமியினுடைய மேற்பரப்பை விட அதனுடைய வயிறு – அதாவது கபர் சிறந்ததாகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் ஒரு முறை பனூ அசத் கோத்திரத்தைச் சார்ந்த மக்கள் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின் தொழுகையைக் குறித்து இவர் சரியாக தொழ வைப்பதில்லை என புகார் செய்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை ஆராய்வதற்காக அனுப்பி வைத்தார்கள். புகார் தவறானது என்று ஆராய்ச்சியில் தெரிய வந்தது. ஆயினும் சில நுட்பமான விஷயங்களின் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை மதீனாவுக்கு அழைத்து விட்டார்கள்.

(ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 88–90 & ஷரஹ் ஸர்கானீ... தொகுதி 4 பக்கம் 539 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் பக்கம் 292)

இது குறித்த விளக்கம் சஹீஹ் புகாரியினுடைய அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் ஜாபிர் இப்னு ஸமுரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் மீது கூஃபா வாசிகளில் சிலர் உமர் (ரலி) அவர்களிடம் புகார் கூறினார்கள். உடனே உமர் (ரலி) அவர்கள் சஅத் (ரலி) அவர்களை நீக்கிவிட்டு அம்மார் (ரலி) அவர்களை அதிகாரியாக நியமித்தார்கள். சஅத் முறையாகத் தொழுகை நடத்துவதில்லை என்பதும் அவர்களின் புகார்களில் ஒன்றாக இருந்தது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களை வரவழைத்து, அபூ இஸ்ஹாக்! நீங்கள் முறையாகத் தொழுகை நடத்துவதில்லை என்று கூஃபா வாசிகளில் சிலர் கூறுகின்றனரே! என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அபூ இஸ்ஹாக் என்பது ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின் சுட்டுப் பெயராகும்.

அதற்கு ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுது காட்டிய முறைப்படியே நான் அவர்களுக்கு தொழுகை நடத்தினேன். அதில் எந்தக் குறைவும் வைக்கவில்லை. இஷாவுடைய முதல் இரண்டு ரக்அத்களில் நீண்ட நேரம் ஓதியும் பின் இரண்டு ரக்அத்களில் சுருக்கமாக ஓதியும் தொழுகை நடத்துகிறேன் என்று பதிலளித்தார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், உம்மைப் பற்றி நம்முடைய கருத்தும் அதுவே என்று கூறினார்கள்.

அதன் பின்னர் ஒரு நபரை அல்லது சில நபர்களை ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுடன் கூஃபாவிற்கு அனுப்பி, ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களைப் பற்றி கூஃபாவாசிகளிடம் விசாரிக்கச் சொன்னார்கள். விசாரிக்கச் சென்றவர் ஒரு பள்ளிவாசல் விடாமல் அவர்களைப் பற்றி விசாரித்தபோது அனைவரும் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களைப் பற்றி நல்ல விதமாகவே கூறினார்கள். இறுதியில் 'பனூ அபஸ்' கூட்டத்தாரின் பள்ளிவாசலில் விசாரித்தபோது, அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த அபூ ஸஃதா எனப்படும் உஸாமா அவர்கள் தமது படையிலுள்ளவர்களிடம் எளிமையாக நடக்கவில்லை; சமமாகப் பங்கிடுவதில்லை; தீர்ப்பு வழங்குவதில் நீதியாக நடப்பதில்லை என்று புகார் கூறினார்.

இதைக்கேட்ட ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! மூன்று பிரார்த்தனைகளை நான் செய்யப் போகிறேன் என்று கூறிவிட்டு, இறைவா! உன்னுடைய இந்த அடியார் பொய்யராகவும், பகட்டுக்காகவும் புகழ் விரும்பிப் புகார் கூறுபவராகவும் இருந்தால் அவரின் ஆயுளை அதிகப்படுத்துவாயாக. அவரின் வறுமையையும் அதிகப்படுத்துவாயாக. அவரைப் பல சோதனைகளுக்கு ஆளாக்குவாயாக என்று பிரார்த்தனை செய்தார்கள்.

இதன் பிறகு அந்த மனிதரிடம் எவரேனும் நலம் விசாரித்தால், சோதனைக்காளான முதுபெரும் வயோதிகனாகி விட்டேன். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின் சாபம் என் விஷயத்தில் பலித்து விட்டது எனக் கூறக் கூடியவராகி விட்டார். அதாவது மக்கள் போய் குற்றச்சாட்டு கூறச் செய்தார்கள். அதற்கான விளைவை அனுபவிக்கின்றேன் என்றார்.

அப்துல் மாலிக் அவர்கள், அதன் பிறகு நானும் அவரைப் பார்த்திருக்கிறேன்; முதுமையினால் அவரின் புருவரங்கள் அவரின் கண்களை மறைத்து இருந்தன. ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், அதன் பிறகும் கூட அவனுடைய ஒழுக்க நிலை எவ்வாறு இருந்தது என்றால் வழிகளில் பெண்களை அவன் கேலி செய்வான். மேலும் கண்களால் அவர்களை சைகை செய்து வந்தான் என்று குறிப்பிட்டார். புகாரியில் இந்த அனைத்து சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் அஸ்ஹான்.... ஹதீஸ் எண் 755)

எவ்வாறிருப்பினும் இந்த புகார்களால் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு மிகவும் துக்கம் உண்டானது. அன்னார் கூறினார்கள்:

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுவதும், அவர்கள் மீது நேசம் கொள்வதும் இறுதியில் மனிதனை இறைவனுக்கு பிரியமானவனாக ஆக்கி விடுகின்றது. (ஹகீகதுல் வஹி, ருஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 65)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

இறை வழியில் அம்பெய்த அரபுகளில் நானே முதலாமவன் ஆவேன். எங்களுக்கு மரத்தின் இலைகளைத் தவிர வேறு உணவு எதுவும் இல்லாதிருக்கும் நிலையில் நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போர் புரிந்து வந்தோம். எங்களுடைய நிலை எவ்வாறு இருந்தது என்றால், நாங்கள் ஒட்டகங்களும, ஆடுகளும் கெட்டிச் சாணியிடுவதைப் போன்று ஒன்றோடொன்று ஒட்டாமல் மலம் கழித்து வந்தோம். ஆனால் இப்போதுள்ள நிலை என்னவென்றால், பனூ அஸத் குலத்தார் இஸ்லாமிய ஒழுங்கை எனக்கு கற்றுக் கொடுக்கின்றனர். அப்படியானால், நான் செய்து வந்த வழிபாடு வீணாகி, நான் இழப்பிற்குள்ளாகி விட்டேன் போலும். பனூ அஸத் குலத்தார் அதைக் குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அவர் சரியாக தொழுவதில்லை என புகார் செய்திருந்தார்கள் என்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள். இதுவும் புகாரியினுடைய அறிவிப்பாகும்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) பாப் மனாகிப் சஅத் பின் அபீ வக்காஸ் ஹதீஸ் எண் 3728 & சுனன் திர்மிதி, அப்வாபுஸ் ஸுஹத்.... ஹதீஸ் எண் 2365,2366)

ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டு ஹ!ரத் உமர் (ரலி) அவர்கள் மீது கொலை தாக்குதல் நடத்தப்பட்டபோது அவர்களிடம் உங்களுக்குப் பிறகு கிலாஃபத்துக்காக ஒருவரை தேர்வு செய்யுங்கள் என்று மக்கள் கூறினார்கள். இதன் அடிப்படையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிலாஃபத்தை தேர்ந்தெடுக்கும் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அதில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), யஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி), ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) மற்றும் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) ஆகியோர் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், இவர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவர்களை சுவர்க்கவாசி என்று கூறியிருக்கின்றார்கள் என்று அறிவித்தார்கள்.

அதன் பிறகு கூறினார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுக்கு கிலாஃபத் கிடைத்து விட்டால் அவர் கலீஃபாவாக இருப்பார்கள். இல்லையென்றால் உங்களில் எவர் கலீஃபாவாக இருப்பாரோ அவர் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களிடமிருந்து உதவி பெற்றுக் கொள்ளட்டும். ஏனென்றால் அவர் எந்த வேலைக்கும் ஆகாதவர் என்றோ அல்லது ஏமாற்றினார் என்றோன் நான் அவரை பணி நீக்கம் செய்யவில்லை என்று கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்).... ஹதீஸ் எண் 3700 & சஹீஹ் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 1392)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களை மறுபடியும் கூஃபாவுடைய ஆளுநராக நியமித்தார்கள். மூன்று வருடங்கள் வரை அந்த பணியில் இருந்தார்கள். அதன் பிறகு ஏதேனும் ஒரு காரணத்தினால் அப்போது பைத்துல் மால் உடைய பொறுப்பாளராக இருந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அவரை பணி நீக்கம் செய்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகு மதீனாவில் தனிமையை மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு எதிராக குழப்பம் ஆரம்பித்த போதும் அன்னார் தனிமையில்தான் இருந்தார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 120)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: குழப்ப காலத்தில் ஒரு முறை ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின் மகன் அவரிடம் ஜிஹாது செய்வதிலிருந்து உங்களை எது தடுக்கிறது? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள், நம்பிக்கை கொண்டவரையும், காஃபிரையும் அடையாளங்கண்டு கொள்ளும் ஒரு வாள் எனக்கு கிடைக்காத வரை நான் போரிட மாட்டேன்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 106 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்பொழுது முஸ்லிம்கள் தமக்குள் போர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள்.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: கண்கள், உதடுகள், நாவு போன்றவை உள்ள வாளைக் கொண்டு வாருங்கள். அந்த வாள் இன்ன நபர் நம்பிக்கையாளர் என்றும், இன்ன நபர் காஃபிர் என்றும் எனக்கு கூற வேண்டும். ஏனென்றால் நான் தற்போது வரை காஃபிர்களுக்கு எதிராக மட்டுமே போர் செய்துள்ளேன் என்று கூறினார்கள்.

திர்மிதியில் ஓர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய காலகட்டத்தில் ஆரம்பித்த குழப்பங்களை குறித்து கூறினார்கள். அதாவது நான் சாட்சி கூறுகிறேன்! இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். நிச்சயமாக வரும் காலத்தில் ஒரு குழப்பம் ஏற்படும். அதில் உட்கார்ந்திருப்பவர் நிற்பவரை விட சிறந்தவராக இருப்பார். நின்று கொண்டிருப்பவர் நடப்பவரை விட சிறந்தவராக இருப்பார். நடக்கக்கூடியவர் ஓடக்கூடியவரை சிறந்தவராக இருப்பார். அதாவது எல்லா விதத்திலும் எவ்வகையிலும் இந்த குழப்பத்தில் இணையக்கூடாது. மாறாக, அதிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எவ்வாறிருப்பினும் எனது வீட்டுக்குள் குழப்பம் வந்து விட்டால் நான் என்ன செய்ய வேண்டும்? என்று ஒருவர் கேட்டார். அதற்கு அன்னார் கூறினார்கள்: நீ இப்னு ஆதமைப் போன்று ஆகிவிட வேண்டும் என்றார்கள். (சுனன் திர்மிதி, அப்வாபுல் ஃபித்ன்... ஹதீஸ் எண் 2194)

அதாவது திருக்குர்ஆனில் அவரைக் குறித்து கூறப்பட்டுள்ளது. இப்னு ஆதமே! உம்மை காப்பாற்றிக் கொள்ளும்! ஆனால் கொலை செய்யும் எண்ணத்தில் ஒருவர் மற்றவருடன் சண்டையிட வேண்டாம். திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள இந்த சம்பவத்தைத்தான் அன்னார் உதாரணமாக கூறினார்கள் போலும்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலட்டத்தில் குழப்பம் ஆரம்பித்தபோது அந்த குழப்பத்தை வீழ்த்துவதற்காக சஹாபாக்கள் செய்த அழகிய முயற்சியை பற்றி குறிப்பிட்டவழறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

சஹாபாக்கள் தற்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடத்தில் ஒன்று சேர்வதற்கு வாய்ப்பு தரப்படாமல் இருந்தது. ஆயினும் அவர்கள் தங்களது கடமையிலிருந்து கவனமற்றவர்களாக இருக்கவில்லை. காலத்தை கருத்தில் கொண்டவாறு அவர்கள் இரண்டு பிரிவுகளாக தமது வேலைகளைப் பிரித்துக் கொண்டார்கள். தமது ஒழுக்கத்தினுடைய தாக்கம் பொது மக்களின் மீது அதிகமாக இருந்த வயது முதிர்ந்த சஹாபாக்கள் தமது நேரங்கள் மக்களை புரிவதற்காக செலவழித்தார்கள். மேலும் எவர்களுக்கு இவ்வாறான தாக்கம் இருக்கவில்லையோ அல்லது இளைஞர்களாக இருந்தார்களோ அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை பாதுகாப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். முதலில் கூறப்பட்ட பிரிவில் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் பாரசீகத்தை வெற்றி கொண்ட ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) ஆகியோர் குழப்பத்தை குறைப்பதற்கு எல்லோரையும் விட அதிகமாக முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.

*(ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 69)*

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

(இஸ்லாம் மே இஹ்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 321)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய கிலாஃபத்திலும் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் தனிமையை மேற்கொண்டிருந்தார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் அமீர் முஆவிய்யா ஆகிய இருவருக்குமிடையில் கருத்து வேறுபாடு அதிகரித்தபோது அமீர் முஆவிய்யா அவர்கள் மூன்று சஹாபிகளுக்கு கடிதம் எழுதி ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு எதிராக தமக்கு உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். அதில் ஒருவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி), இரண்டாமவர் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி), மூன்றாமவர், ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) ஆகியோர் ஆவார்கள். அப்போது மூன்று பேருமே மறுத்து விட்டார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அமீர் முஆவியாவிற்கு இந்த கவிதைகளை எழுதி அனுப்பி வைத்தார்கள்.

مُعَاوِیَ دَاؤُكَ الدَّاءُ الْعَيَاءُ     وَ لَيْسَ لِمَا تَجِيءُ بِهِ دَوَاءُ
اَيَدْعُوْنِي اَبُوْ حَسَنٍ عَلِيٌّ     فَلَمْ اَرْدُدْ عَلَيْهِ مَا يَشَاءُ
وَ قُلْتُ لَهٗ اَعْطِنِيْ سَيْفًا بَصِيْرًا     تَمِيْزُ بِهِ الْعَدَاوَةُ وَالْوَلَاءُ
اَتَطْمَعُ فِي الَّذِيْ اَعْيَا عَلِيًّا     عَلٰى مَا قَدْ طَمِعْتَ بِهِ الْعَفَاءُ
لَيَوْمٌ مِنْهُ خَيْرٌ مِّنْكَ حَيًّا     وَ مَيْتًا اَنْتَ لِلْمَرْءِ الْفِدَاءُ

இதனுடைய மொழியாக்கம் என்னவென்றால், முஆவியாவே! உமது நோய் கடுமையாக உள்ளது. உமது நோய்க்கு எந்த மருந்தும் இல்லை. அபுல் ஹஸன் என்னை சண்டையிடுவதற்காக கூறினார். அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள். ஆனால் நான் அவர்களுடைய பேச்சைக் கூட கேட்கவில்லை. நான் அவர்களிடம், கண்களைக் கொண்ட எதிரி மற்றும் நண்பரை எனக்கு பிரித்தறிந்து கூறக்கூடிய ஒரு வாளை எனக்கு தாருங்கள் என்று கூறினேன்.

முஆவியாவே! எவர் போர் விஷயத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய பேச்சை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர் உம்முடைய பேச்சை ஏற்றுக் கொள்வார் என்று எவ்வாறு நீர் எதிர்பார்க்கின்றீர்! இந்த அளவுக்கு கூட உமக்கு புரியவில்லையா? ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய வாழ்வின் ஒரு நாள் உமது முழு வாழ்வு மற்றும் மரணத்தை விடவும் சிறந்ததாகும். நீர் இவ்வாறான மனிதருக்கு எதிராக என்னை அழைக்கின்றீர் என்று எழுதியிருந்தார்கள்.

இது அசதுல் காபாவுடைய அறிவிப்பாகும். அதில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 455 சஅத் பின் மாலிக் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: ஒரு முறை அமீர் முஆவியா அவர்கள் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களிடம் அபு துராபிற்கு எதிராக நீங்கள் ஏன் அவரை ஏசி பேசுவதில்லை? உங்களை என்ன விஷயம் தடுக்கிறது? என்று கேட்டார்கள். அபு துராப் என்பது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய சுட்டுப் பெயராக இருந்தது. அதற்கு ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய மூன்று விஷயங்கள் இருககின்றன. அதில் ஒன்று எனக்கு கிடைத்திருந்தாலும சிகப்பு ஒட்டகங்கள் கிடைத்ததை விட நான் அதிக மகிழ்ச்சியடைந்திருப்பேன். அன்று மூன்று விஷயங்களின் காரணமாக நான் அவரை அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை ஏசிப்பேசுவதில்லை.

முதல் விஷயம் என்னவென்றால், ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு போருக்கு செல்லும்போது தமக்குப் பின்னால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை விட்டுச் சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், குழந்தைகளையும், பெண்களையும் கவனித்துக் கொள்வதற்காகவா என்னை விட்டுச் செல்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மூஸாவிடம் ஹாரூன் இருந்த அந்தஸ்தில் என்னிடம் நீங்கள் இருப்பதை விரும்பவில்லையா? ஆயினும், ஒரு வேறுபாடு என்னவெனில், எனக்குப் பிறகு உமக்கு நுபுவ்வத்தில் அந்தஸ்து கிடைக்காது என்று கூறினார்கள்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், கைபர் போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை கூறினார்கள்: நான் எப்படிப்பட்ட மனிதருக்கு இஸ்லாமிய கொடியை கொடுப்பேன் என்றால், அவர் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக்கக்கூடியவராக இருக்கிறார்; மேலும் அல்லாஹ்வும் அவனது தூரும் அவரை நேசிக்கின்றனர் என்றார்கள்.

இதைக்கேட்ட எங்களில் ஒவ்வொருவரும் அந்தக் கொடியை அவர் பெற வேண்டும் என்று விரும்பினார்கள். நாமும் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிக்கின்றோம் என்று நினைத்தார்கள். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். அதாவது எங்களில் எவருக்கும் கொடுக்கவில்லை. அலியை அழைத்து வருமாறு கூறினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் வந்தவுடன் அவருடைய கண்களில் ஏதோ கஷ்டம் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவருடைய கண்களில் தமது உமிழ்நீரை வைத்தார்கள். மேலும் அவருக்கு இஸ்லாத்தின் கொடியை கொடுத்தார்கள். அல்லாஹ் அந்நாளில் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான்.

மூன்றாவது விஷயம் என்னவென்றால்,

فَقُلْ تَعَالَوْا نَدْعُ اَبْنَآءَنَا وَاَبْنَآءَكُمْ وَنِسَآءَنَا وَنِسَآءَكُمْ

நீர் கூறுவீராக! வாருங்கள் நாங்கள் எங்களுடைய ஆண் மக்களையும், நீங்கள் உங்கள் ஆண் மக்களையும், நாங்கள் எங்கள் பெண் மக்களையும், நீங்கள் உங்கள் பெண் மக்களையும் அழைத்துக் கொள்வோம் (3:62) என்ற வசனம் இறங்கியபோது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் பாத்திமா (ரலி), ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும் அல்லாஹ்வே! இவர்கள் எனது குடும்பத்தினர் என்று கூறினார்கள்.

இது திர்மிதியுடைய அறிவிப்பாகும்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப்.... ஹதீஸ் எண் 3724)

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுடைய மகன் முஸ்அப் பின் சஅத் அறிவிக்கின்றார்கள்: எனது தந்தை மரணம் அடையும்போது அவருடைய தலை எனது மடியில் இருந்தது. எனது கண்களில் நீர் நிரம்பியிருந்தது. அவர் என்னைப் பார்த்து, எனது அன்பிற்குரிய மகனே! என்ன விஷயம் உன்னை அழ வைக்கிறது என்று கேட்டார்கள். அதற்கு நான் உங்களுடைய மரணத்தின் துக்கம் ஆகும்;மேலும் உங்களுக்கு பிறகு உங்களுக்கு மாற்றாக நான் யாரையும் காண்பதில்லை என்று கூறினேன்.

இதற்கு அவர்கள் கூறினார்கள்: எனக்காக அழ வேண்டாம். அல்லாஹ் எனக்கு ஒருபோதும் தண்டனை தர மாட்டான். நான் சொர்க்கவாசிகளைச் சார்ந்தவன் ஆவேன்.

இன்ன நபர் இன்ன நபரை பார்த்து சொர்க்கவாசி என்று கூறிவிட்டால் எவ்வாறு சொர்க்கவாசியாக ஆகி விடுவார் என்று சில மக்கள் ஆட்சேபனை செய்கிறார்கள். அங்கே ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களும் நான் சொர்க்கவாசி ஆவேன் என்று கூறியிருக்கிறார்கள். அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு கூறுகின்றான். நம்பிக்கை கொண்டவர்களுக்கு அவர்கள் அல்லாஹ்வுக்கா செய்த நன்மைக்கான கூலியை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குகின்றான்.

நிராகரிப்பவர்களை பொருத்தவரையில் அவர்கள் செய்த நல்ல வேலையின் காரணமாக அவர்களுடைய தண்டனையை அல்லாஹ் எளிதாக்குகிறான். பிறகு நல்ல வேலையின் கூலி முடிவடைந்தவுடன் அல்லாஹ் அவர்களுக்கு மீண்டும் தண்டனை கொடுக்கின்றான். ஒவ்வொரு மனிதனும் தான் யாருக்காக வேலை செய்தாரோ அவனிடமே தன்னுடைய செயல்களுக்கான கூலியை வேண்ட வேண்டும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 108,109 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுடைய மகன் அறிவிக்கிறார்கள்: நான் எனது தந்தையிடம் நீங்கள் அன்ஸாருடைய குழுவுடன் எந்த அளவு நடந்து கொள்கிறீர்களோ அவ்வாறு மற்றவருடன் நடந்து கொள்வதை காணவில்லையோ என்று கேட்டேன். அதற்கு அவர்கள், எனது மகனே! உம்முடைய உள்ளத்தில் அவர்களுக்காக ஏதேனும் இருக்கிறதா? என்று கேட்டார்கள். அதாவது நான் அன்ஸாருடன் இவ்வாறு நடந்து கொள்கிறேன். உம்முடைய உள்ளத்திலும் ஏதேனும் விஷயம் உள்ளதா? என்று கேட்டார்கள்.

அதற்கு நான், அவ்வாறு ஒன்றும் இல்லை. ஆனால் நீங்கள் இவ்வாறு நடந்து கொள்வதை கண்டு எனக்கு ஆச்சரியமாக உள்ளது என்றேன். அதற்கு அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற நான் கேட்டுள்ளேன். அதாவது நம்பிக்கை கொண்டவர்கள் தான் அவர்களுக்கு நண்பர்களாக இருப்பார்கள். மேலும் நயவஞ்சகர்கள் தான் அவர்களைக் கண்டு வெறுப்பு அடைவார்கள். ஆகவே இதன் காரணமாகத்தான் இவ்வாறு நடந்து கொள்கிறேன் என்று கூறினார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 456 சஅத் பின் மாலிக் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஜரீர் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு முறை அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடத்தில் சென்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களைக் குறித்து வினவினார்கள். அப்போது அவர்கள் பதிலளித்தார்கள். நான் அவர்களை எந்நிலையில் விட்டு வந்தேன் என்றால், அவர்கள் தனது ஆட்சிக்கான ஆற்றல் பெற்றிருந்தும் மக்களில் மிக நல்லவராக இருந்தார்கள். எல்லோரையும் விட குறைவாக கடுமை காட்டக் கூடியவராக இருந்தார்கள். அவர் மக்களுக்கு பரிவுள்ள தாயைப் போன்று விளங்கினார்கள். எவ்வாறு எறும்புகள் கொஞ்சம் கொஞ்சாக சேகரிக்குமோ அவ்வாறு அவர்கள் மக்களுக்காக ஒன்று திரட்டி வந்தார்கள். போரின்போது எல்லோரையும் விட அதிக வீரராக திகழ்ந்தார்கள். மேலும் குரைஷிகளில் எல்லோரையும் விட அதிக நேசத்திற்குரியவராக மக்களிடையே இருந்தார்கள் என்று கூறினார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 3 பக்கம் 64 – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 55 ஆம் ஆண்டில் மரணமடைந்தார்கள். மரணம் அடையும்போது அன்னாருடைய வயது 70 ஐ விட சற்று அதிகமாக இருந்தது என்று கூறப்படுகிறது. சிலரைப் பொருத்தவரையில், அன்னாருடைய வயது 74 ஆக இருந்தது என்று கூறியிருக்கிறார்கள். இன்னும் சிலரைப் பொருத்தவரையில் அன்னாருடைய வயது 83 என்று கூறிகிறார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 110 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 610 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் மரணமடைந்த வருடத்தை பற்றி கருத்து வேறுபாடு காணப்படுகிறது. பல்வேறு அறிவிப்புகளில் அன்னாருடைய மரணத்தின் ஆண்டு 51 முதல் 58 ஹிஜ்ரி வரை கூறப்பட்டிருக்கிறது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 456 சஅத் பின் மாலிக் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் மரணம் அடைந்தபோது, இரண்டரை இலட்சம் தீனார்களை சொத்தாக விட்டுச் சென்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 110 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் அவர்கள் அகீக் என்ற இடத்தில் மரணமடைந்தார்கள். இது மதீனாவிலிருந்து 7 மைல் தொலைவிலோ அல்லது பத்து மைல் தொலைவிலோ இருக்கக்கூடிய இடமாகும்.

சிலர் கூறுவது என்னவென்றால், அங்கிருந்து அன்னாருடைய மய்யத்து மக்களுடைய தோள்களில் சுமந்து மதீனாவிற்கு கொண்டு வரப்பட்டது. மேலும மஸ்ஜிது நபவியில் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டது. மதீனாவின் ஆளுநராக இருந்த மர்வான் பின் ஹகம் என்பவர் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். அன்னாருடைய ஜனாஸா தொழுகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மனைவிமார்களும் கலந்து கொண்டார்கள். ஜன்னத்துல் பகீ கப்ரில் அன்னால் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 456 சஅத் பின் மாலிக் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 110 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 610 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுடைய ஜனாஸாவைக் குறித்து அறிப்புகள் காணக் கிடைக்கின்றன. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் மரணமடைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மனைவிமார்கள் அன்னாருடைய ஜனாஸாவை பள்ளிக்கு கொண்டு வருமாறு மக்களிடம் கூறினார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மனைவிமார்களும் அந்த தொழுகையில் கலந்து கொள்ள விரும்பினார்கள்.

ஆகவே மக்கள் அவ்வாறே செய்தார்கள். அவர்கள் தொழுவதற்காக ஜனாஸா அவர்களுடைய அறைக்கு முன்னால் வைக்கப்பட்டது. பிறகு அமரக்கூடிய இடத்திற்கு அருகில் உள்ள இடமாகிய பாவுல் ஜனாயத்திலிருந்து வெளியே கொண்டு செல்லப்பட்டது. மக்கள் இது குறித்து குறை கூறுவதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மனைவிமார்களுக்கு தகவல் சென்றடைந்தது. அதாவது மக்கள் இந்த விஷயத்தை குறித்து குறை கூறுகிறார்கள்; ஜனாஸாவை பள்ளிவாசலுக்கு கொண்டு வரக்கூடாது என்று பேசித் திரிகிறார்கள் என்று கேள்விப்பட்டார்கள்.

அவர்களிடம் இந்த விஷயம் சென்றடைந்தபோது, மக்கள் தமக்கு தெரியாத விஷயத்தை குறித்து எவ்வளவு விரைவாக குறை கூறுகிறார்கள்? என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். அதாவது பள்ளிவாசலில் ஜனாஸா கொண்டு வரப்பட்டது என்று மக்கள் எங்கள் மீது ஆட்சேபனை செய்திருக்கிறார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுஹைல் பின் பய்ஸா என்பவருடைய ஜனாஸா தொழுகையை பள்ளிவாசளுக்குள்தான் நடத்தினார்கள் என்று கூறினார்கள். இது முஸ்லிமுடைய அறிவிப்பாகும்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 973 & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 109 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

கிளையே! நீ பசுமையாக இருக்கின்றாய் என்பதைக் கூட நான் ஏற்றுக் கொள்கின்றேன். நீ மலர்கின்றாய்; பூக்களைத் தருகின்றாய் என்பயையும் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால், வேரை விட்டு நீ தனியாக சென்று விடாதே! இதனால் நீ காய்ந்துபோய் விடுவாய். எல்லா அருள்களிலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டதாக நீ ஆகி விடுவாய். *(ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 68–69)*

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid, Melapalayam

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் தமது மரணத் தருவாயில், எனக்காக கல்லறை எழுப்புங்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக எவ்வாறு செங்கள் வைக்கப்பட்டதோ அவ்வாறு எனக்கு செங்கல் வையுங்கள் என உயிர் எழுதினார்கள். இதுவும் முஸ்லிமுடைய அறிவிப்பாகும்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 966)

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் முஹாஜிர் ஆண்களில் இறுதியாக வஃபாத்தான மனிதராவார்கள். ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் தம் மரணத்தின்போது ஒரு கம்பளி ஜிப்பாவை வெளியில் எடுத்தார்கள். இதை எனக்குக் கஃபனாக அணிவியுங்கள். ஏனென்றால் இந்த ஜிப்பாவைத்தான் பதர் யுத்தத்தில் கலந்து கொள்ளும்போது நான் அணிந்திருந்தேன். இந்த நேரத்திற்காகத்தான் அதாவது மரண வேளைக்காகத்தான் நான் அதை பராமரித்து வைத்திருந்தேன் என்று உயிர் எழுதினார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 456 சஅத் பின் மாலிக் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் சஹாபாக்களுக்கு உதவித்தொகை நிர்ணயிக்கப்பட்டபோது பத்ருப் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களுடைய உதவித்தொகை குறிப்பாக உயர்த்தி நியமிக்கப்பட்டது. பத்ருப் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களும் கூட பத்ருப் போரில் கலந்து கொண்டதை சிறப்பான பெருமையாக நினைத்து வந்தனர்.

பிரபல்யமான மேற்கத்திய எழுத்தாளரான வில்லியம் மியூர் எழுதுகின்றார்: பத்ருப் போரில் கலந்து கொண்ட சஹாபாக்கள் இஸ்லாமிய சமூகத்தில் மிக உயர்ந்த உறுப்பினர்களாக கருதப்பட்டார்கள். சஅத் பின் அபீ வக்காஸ் அவர்கள் 80 வயதில் மரணமடைந்தபோது, பத்ரு போர் நாளன்று நான் அணிந்த உடையை எனக்கு கொண்டு வாருங்கள். அதை நான் இன்றைய நாளுக்காக பராமரித்து வைத்திருந்தேன் என்று கூறினார்கள்.

பத்ருப் போர் காலத்தில் முற்றிலும் இளைஞராக இருந்த அதே சஅத்தான் இவர் ஆவார்கள். பிறகாலத்தில் இவருடைய கரங்களினால் ஈரான் வெற்றி கொள்ளப்பட்டது. கூஃபாவின் தோற்றுனரும், ஈராக்கின் கவர்னராகவும் இருந்தார்கள். ஆனால் இவருடைய கண்ணோட்டத்தில் இந்த அனைத்து கண்ணியங்களும், பெருமைகளும் பத்ருப் போரில் கலந்து கொண்ட பெருமை மற்றும் கண்ணியத்திற்கு முன்பு முற்றிலும் அற்பமானவையாக தெரிந்தன. பத்ருப் போரில் தான் அணிந்த உடையை தமது அனைத்து பொன்னாடைகளை விடவும் சிறப்பிற்குரிய ஆடையாக கருதி வந்தார். அதே ஆடையில் சுற்றப்பட்டு மண்ணறையில் இறக்கப்பட வேண்டும் என்பதே அவருடைய கடைசி விருப்பமாக இருந்தது.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 373)

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் கஸ்ரே சஅத் என்ற மாளிகையை கட்டியதைக் குறித்து முன்பே கூறப்பட்டது. இக்கட்டடம் கட்டப்பட்டது குறித்து எவருடைய உள்ளத்திலாவது ஏதாவது சிந்தனையோ, கேள்வியோ இருக்கும் என்றால் அதற்கான பதில் இதுவாகும். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கடைசி காலத்தை தனிமையில் கழித்தார்கள். மேலும் அவர்கள் எதை விரும்பினார்கள் என்றால் அது பதர் யுத்தத்தில் அணிந்து கொண்ட உடையை விரும்பினார்கள். இதற்கு முன்பும் கூட அவர்கள் தனிமையில் இருந்தபோது அவர்களின் நிலை எவ்வாறு இருந்தது என்றால், அது அவர்களுடைய பணிவு மற்றும் எளிமைக்கு சான்றாக விளங்குகிறது.

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் பதர் யுத்தத்தில் கலந்து கொண்டபோது, எனக்கு ஒரே ஒரு மகன்தான் இருந்தார்.

மற்ற அறிவிப்புகளிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஜ்ஜத்துல் விதாவின்போதும் அன்னாருக்கு ஒரே ஒரு மகன்தான் இருந்தார்கள். அதன் பிறகு அல்லாஹ் எந்த அளவுக்கு அருள் செய்தான் என்றால், என்னுடைய சந்ததிகள் மிக அதிகமாக ஆகி விட்டனர்.

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் பல்வேறு காலகட்டத்தில் 9 திருமணங்கள் செய்திருந்தார்கள். அவர்களின் மூலமாக அல்லாஹ் அன்னாருக்கு 34 பிள்ளைகளை வழங்கினான். 17 ஆண் பிள்ளைகளும், 17 பெண் பிள்ளைகளும் இருந்தார்கள்.

(ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 98,99 & அல் அஸாபா தொகுதி 5 பக்கம் 219 உமர் பின் சஅத் பின் அபீ வக்காஸ் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்புத் இத்துடன் முடிவடைகிறது. இனிமேல் இன்ஷா அல்லாஹ் மற்றொரு சஹாபியைக் குறித்து குறிப்பு ஆரம்பாகும்.

இன்று நான் தொழுகைக்குப் பிறகு சில ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா மதிப்பிற்குரிய ஸஃப்தர் அலி குஜ்ஜர சாஹிப் அவர்களுடையதாகும். இவர் ஃபஸ்ல் பள்ளிவாசலில் விருந்து உபசரிப்பு துறையில் தன்னார்வலராக தொண்டாற்றி வந்தார்கள். ஜூலை 25 ஆம் தேதி மாரடைப்பின் காரணமாக மரணமடைந்தார்கள். சில நாட்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவருடைய வயது 79 ஆகும். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இறை அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். 30 வருட காலமாக யூ.கே உடைய விருந்தோம்பல் துறையில் தன்னார்வத் தொண்டாற்றக்கூடிய வாய்ப்பை பெற்றிருந்தார்கள். இறுதி காலம் வரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய விருந்தினர்கள், ஊழியர்கள் மற்றும் ஜமாஅத்தினருக்கும் அளப்பரிய தொண்டாற்றி, விருந்தோம்பல் செய்யும் நல்வாய்ப்பை பெற்று வந்தார்கள்.

இதுதவிர நீண்ட காலமாக அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் மற்றும் அக்பாரே அஹ்மதிய்யா என்ற பத்திரிகைகளினுடைய பேக்கிங் மற்றும போஸ்டிங் பணிகளுடைய தொண்டும் செய்து வந்தார்கள். மிக நீண்ட காலமாக அவருடைய ஹளலடரஅ வழக்கு நிலுவையில் இருந்தது. நீண்ட காலத்திற்குப் பிறகு ஹளலடரஅ வழக்கு சரியானது. இவருடைய குடும்பம் யூ.கே வருவதற்கான ஏற்பாடு நடந்தது. அப்போது அல்லாஹ்வுக்கு அதிகமாக நன்றி செலுத்தி வந்தார்கள். மிக நீண்ட காலமாக அவர் தனியாக இருந்தது குறித்து எப்பொழுதும் ஒருபோதும் வருத்தப்பட்டது கிடையாது.

மர்ஹூம் அவர்கள் கிலாஃபத்தின் பித்தராக இருந்தார்கள். மேலும் எப்பொழுதும் அதன் வாசலில் தன்னை அர்ப்பணித்திருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். ஜமாஅத்தினர் மற்றும் இரத்த உறவினர்களை நேசிக்கக் கூடியவராகவும், கண்ணியப்படுத்தக் கூடியவராகவும் திகழ்ந்தார்கள். மிக அதிகமாக துஆ செய்யக் கூடியவராகவும், எல்லோருக்கும் பிடித்தமானவராகவும், மிகவும் பரிவுள்ளம் கொண்டவராகவும் திகழ்ந்தார்கள். பஞ்சாபி மொழியினுடைய கவிஞராகவும் இருந்தார்கள். மேலும தனது அழகிய குரல் வளத்தின் காரணமாக ஜமாஅத்திரிடையே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தார். மர்ஹூம் ஆண்டு மாநாட்டின்போது மக்களிடையே நஸ்ம் படிப்பதன் காரணமாக மிகவும் விருப்பமிக்கவராக இருந்தார்கள். இவர் தனக்குப் பின்னால் மனைவி, 4 மகன்கள், 2 மகள்களை தமது நினைவாக விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

விண்ணிலிருந்து நியமிக்கப்பட்டு ஒரு நபி அல்லது தூதர் வரும்போது அந்த நபியின் அருளால் பொதுவாக ஓர் ஒளி ஒவ்வொருவரது ஆற்றல்களின் தகுதிகளுக்கேற்ப விண்ணிலிருந்து இறங்குகின்றது. *(ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 69)*

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

மதிப்பிற்குரிய அதாவுல் முஜீப் சாஹிப் எழுதுகிறார்கள்: ஸஃப்தர் அலி சாஹிப் மிகவும் எளிய மனிதராகவும், பற்றுமிக்கவராகவும், பலனை எதிர்பார்க்காமல் தொண்டு செய்யக்கூடியவராகவும், களைப்படையாத ஜமாஅத்தின் தொண்டராகவும் திகழ்ந்தார்கள். அவர்களிடம் காணப்பட்ட 3 அசாதாரணமான சிறப்புகள் அவர்கள் மீதான நேசத்தை என்னுடைய உள்ளத்தில் அதிகரிக்கச் செய்தன.

முதல் விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வுக்கு அதிகமாக நன்றி செலுத்தக்கூடியவராக திகழ்ந்தார்கள். குறிப்பிட்ட அளவிலான வளங்கள் மட்டுமே இருந்தும்கூட ஒவ்வொரு விஷயத்தின்போதும் அல்லாஹ்வைப் புகழ்ந்து, நன்றி செலுத்தி வந்தார்கள்.

இரண்டாவதாக, காலத்தின் கலீஃபா மற்றும் கிலாஃபத் மீது அவருடைய உள்ளத்தில் நேசம் நிறைந்து காணப்பட்டது. ஒரு சிறிய சந்திப்பாக இருந்தாலும் அதில் கிலாஃபத்தின் மீதான நேசம் தொடர்பான விஷயத்தை வெளிப்படுத்தாத எந்த சந்தர்ப்பத்தையும் நான் கண்டதில்லை.

மூன்றாவது விஷயம் என்னவென்றால், மார்க்கத் தொண்டு ஆகும். அவர் அதை நேசத்துடன் செய்து வந்தார்கள். அதை நற்பேறாக கருதி வந்தார்கள்.

அவர்களுடைய மகள் தஹ்ஸீன் சாஹிபா எழுதுகிறார்கள்: வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் அவர்கள் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளார்கள். அவர்களுக்கு தெரிந்த ஒருவருக்கோ அல்லது பள்ளிவாசலில் எவருக்காகவோ ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் வீட்டுக்கு வந்து அந்த நபருடைய பெயரை குறிப்பிட்டு அவர்களுக்காக துஆ செய்யுமாறு கூறுவார்கள். எந்நிலையிலும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக்கூடியவராக திகழ்ந்தார்கள்.

மற்றவர்களுக்காக நன்மை செய்து விட்டு, நீங்கள் எனக்கு நன்மை செய்யக்கூடிய வாய்ப்பை வழங்கினீர்கள் என்று கூறி அவருக்கு நன்றி செலுத்துவார்கள். நீங்கள் இருவரும் எனக்கு இந்த வகையிலும் மிகவும் அன்பிற்குரியவர்கள் ஆவீர்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் பெண் பிள்ளைகளுக்கு கண்ணியமளிப்பாரோ அவர் சொர்க்கத்தில் என்னுடன் இருப்பார்கள் என்று கூறியுள்ளார்கள். எனது தந்தையார் எங்களுக்கு அதிக நேசத்துடன், கண்ணியத்தையும் மரியாதையையும் அதிகமாக தந்திருக்கிறார்கள்.

இரண்டாவது மகள் ரஸியா சாஹிபா கூறுகின்றார்கள்: எப்பொழுதுமே எங்களுடைய தந்தை கிலாஃபத்திற்கு கட்டுப்படுதல், நேசித்தல் குறித்து வலியுறுத்தி வருவார்கள். அவரும் கிலாஃபத்தை நேசிப்பதில் மிக நல்ல முன்னுதாரணமாக திகழ்ந்தார்கள்.

வருத்தம் தெரிவிக்க வந்தவர்களில் ஒவ்வொருவரும், அவர் எங்களைத்தான் அதிகமாக நேசித்தார் என்று நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால் அவர் எல்லோரையுமே அதிகமாக நேசித்து இருக்கிறார்கள் என்று கூறினார்கள். பள்ளிவாசலுக்கு அருகில் வசித்தவர்களுடன் அதிக தொடர்பில் இருந்தார்கள் என்று நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால் அவர் எங்களுடைய குடும்பத்தின் ஒரு பகுதி என்று ஒவ்வொருவரும் கூறினார்கள். மக்களுடைய பணிகளை அவர் செய்து வந்தார். அவர்களுடன் தொடர்பை மேம்படுத்தி வந்தார். அவருடைய இந்த கலப்பற்ற நேசம் மற்றும் தொண்டின் காரணமாக மக்கள் இவரை குறித்து இவ்வாறு தமது எண்ணத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

பல பேர் எனக்கும் அவரைக் குறித்து கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஒவ்வொரு கடிதத்திலிருந்தும் தெரிய வருவது என்னவென்றால், இவர் அவர்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு, நேசம் மற்றும் கலப்பற்ற தொடர்பில் இருந்திருக்கின்றார். மிகக்குறைவானவர்கள் தான் எல்லாவித மக்களுக்கும், எல்லோருக்கும் இவ்வாறு பிடித்தமானவர்களாக இருக்கின்றார்கள்.

இவருடைய ஒவ்வொரு சபையிலும் கிலாபத்தின் மீதான ஆழ்ந்த அற்பணிப்பு வெளிப்பட்டது என்று எழுதக்கூடிய ஒவ்வொருவரும் தெரிவித்துள்ளார்கள். அல்லாஹ் தனது அன்பிற்குரியவர்களின் பாதங்களில் இவர்களுக்கு இடமளிப்பானாக. இவர்களுடைய நன்மைகளையும் துஆக்களையும் அவர்களது பிள்ளைகளை வாரிசாக ஆக்குவானாக. இவருடைய மனைவிக்கு உடல்நலத்தை வழங்குவானாக. பொறுமை மற்றும் நிம்மதியே வழங்குவானாக. இவருடைய மனவையும் நீண்ட காலமாக நோயுற்று இருக்கின்றார்கள். அவரும் மிகவும் பற்றுணர்வுடனும், நேசத்துடனும், அன்புடனும் தொண்டு செய்திருக்கிறார்கள். மேலும் தன்னுடைய அனைத்து பணிகள் மற்றும் கடமைகளுடன் தொண்டாற்றி இருக்கின்றார்கள்.

லங்கர் கானா – தாருல் ஸியாஃபத்தில் தொண்டாற்றி இருக்கிறார்கள். வாழ்வை அர்ப்பணித்த ஒருவரை விட அதிகமாக தொண்டாற்றக்கூடிய உணர்வு இருந்தது. அத்துடன் தம் வீட்டு கடமைகளையும் நிறைவேற்றி இருக்கிறார்கள். மொழி தெரியாதிருந்தபோதிலும் அக்கம்பக்கத்து ஆங்கிலேயே வீட்டாருக்கும் தொண்டாற்றி இருக்கிறார்கள். அவர்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவர்களும் இவரை நன்கு புகழ்ந்து கூறியுள்ளார்கள். அல்லாஹ் இவருடைய அந்தஸ்தை உயர்த்துவானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய பேராசிரியர் நஸீர் அஹ்மது கான் சாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய இஃப்பத் நஸீர் சாஹிபா அவர்களுடையதாகும். மே மாதம் 3 ஆம் தேதி 90 ஆவது வயதில் இதயத்துடிப்பு நின்று விட்டதன் காரணமாக மரணம் அடைந்தார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

1951 ஆம் ஆண்டு மர்ஹூம் டாக்டர் நஸீர் அஹ்மது கான் சாஹிப் அவர்களுடன் இவர்களது திருமணம் நடைபெற்றது. அமெரிக்காவைச் சார்ந்த டாக்டர் இனாயத்துல்லாஹ் மங்கலா சாஹிப் அவர்களுடைய மனைவி ஆயிஷா நஸீர் சாஹிபா எனன்ற பெண்ணும், ஸஹீர் அஹ்மது கான், டாக்டர் முனீர் அஹ்மது கான் என்ற இரண்டு மகன்களும் இருக்கிறார்கள். இவ்விருவருடைய திருமணம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய குடும்பத்தில் நடந்துள்ளது.

இவருடைய மகன் வழி பேரன் நஸீஹ் அஹ்மது கான் வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார். தற்போது அழகிய முறையில் ஆகூஹ வில் கூசயளேஅளைளடைடீ ல் தொண்டாற்றி வருகின்றார்கள். இங்கு உயர் கல்வி கற்றார்கள். அதன் பிறகு தம்மைத்தாமே அர்ப்பணித்து விட்டார்கள். அல்லாஹ் இவரையும் அவர்களுடைய துஆக்களுக்கு வாரிசாக்குவானாக.

மர்ஹூமாவின் மகன் எழுதுகிறார்: நாங்கள் சிறு குழந்தைகளாக இருந்தபோது தாயுடன்தான் தூங்குவோம். இரவில் நாங்கள் கண் விழிக்கும் போதெல்லாம் தஹஜ்ஜுத் தொழுகையில் அழுதழுது துஆ செய்வதையே நாங்கள் கண்டுள்ளோம். இந்த விஷயத்தை மகளும் எழுதியிருக்கிறார்கள். தொடர்ச்சியாக திருக்குர்ஆனே ஓதி வருவார்கள். காலையில் திலாவத் செய்த பிறகுதான் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். அது அல்லாஹும் செல்வதற்கு எங்களுக்கு அனுமதி கிடையாது. இதை எங்கள் மீது கட்டாயமாக ஆக்கியிருந்தார்கள்.

மர்ஹூமா லாஹூரிலும் இருந்துள்ளார்கள். ஆரம்பத்தில் ஸாட்கி திமுயியில் அங்கு லஜ்னாவின் ஜெனரல் செகரட்டரியாக மாடல் டவுனில் தொண்டாற்றக்கூடிய வாய்ப்பை பெற்றிருக்கிறார்கள். 28 ஆண்டுகள் வரை தாருன் நஸ்ர் கர்பியில் சத்ர் லஜ்னாவாக தொண்டாற்றியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் வழிவகைகளும் குறைவாகத்தான் இருந்தன. பரந்த இலாகாவாக இருந்தது. சவாரிகள் கிடையாது. நடந்துதான் மிக நீண்ட தூரம் வரை அதாவது நதி வரை நீண்டிருந்த தாருன் நஸ்ர் முஹல்லா வரை நடந்தே செல்வார்கள்.

பிறகு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள், உங்களுடைய அனைத்து உறவினர்களுக்கும், பலவீனமான அஹ்மதிகளுக்கும் கடிதம் எழுதுங்கள் என்று கூறியபோது இவர்களும் தனது உறவினர்களுக்கு எண்ணற்ற கடிதங்களை எழுதி இருக்கிறார்கள். ஏதாவதொரு காரணத்தைக்கூறி ஏழை அன்பர்களுக்கும் மற்றும் வட்டாரத்தைச் சார்ந்தவர்களுக்கும் உதவி செய்து கொண்டிருப்பார்கள். குறிப்பாக ரமலான் நாட்களில் அவர்களுக்கு ஏதாவது சமைத்து அனுப்பி வைப்பார்கள். மக்களை பரஸ்பரம் இணைத்து வைப்பதற்கு எப்பொழுது முயற்சி செய்சி செய்வார்கள். பிரிவினை ஏற்படுவதிலிருந்து காப்பாற்றுவார்கள்.

மர்ஹூமாவின் மகள் ஆயிஷா எழுதுகின்றார்கள்: வாழ்வை அர்ப்பணித்த ஒருவருடன் மிகவும் புன்சிரித்த முகத்துடன் வாழ்வைக்

கழித்தார்கள். எங்களுடைய கல்வி, மார்க்க பயிற்சியை தனது முதன்மையான கடமையாக ஆக்கி இருந்தார்கள். மேலும் அத்துடன் துஆக்களும் அதிகமாக செய்து வந்தார்கள்.

அல்லாஹ் அவர்கள் மீது கருணை புரிவானாக. அவர்களுக்கு பாவமன்னிப்பை வழங்குவானாக. அவர்களுடைய சந்ததிகளுக்கும் அவர்களுடைய நல்ல விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பை வழங்குவானாக. அவர்களுடைய துஆக்களுக்கு வாரிசாக்குவானாக.

அடுத்த ஜனாஸா யூ.கே ஜெனரல் செகரட்டரி அலுவலகத்தில் பணியாற்றி வந்த மதிப்பிற்குரிய அப்துல் ரஹீம் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் மார்ச் மாதம் 31 ஆம் தேதி மரணமடைந்தார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

அல்லாஹ்வுடைய அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். 1934 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி ராய்ப்பூர் நாபா ஹிந்துஸ்தானில் பிறந்தார்கள். இவருடைய தந்தை ரஹ்மத் அலி ஆவார்கள். இவருடைய குடும்பத்தில் இவருடைய தந்தையினுடைய பெரிய தந்தை சவுத்ரி கரீம் பக்ஷ் சாஹிப் நம்பர்தாரான் என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியின் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. மர்ஹூம் உடைய தந்தையின் சிறிய அன்னையின் மகளும், பெரிய தந்தையின் மகளுமான ரஹீம் பீபீ சாஹிபா அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியா ஆகவும், மல்லவி குத்ரத்துல்லாஹ் சாஹிப் அவர்களுடைய மனைவியும் ஆவார்கள்.

உறவு முறையில் அன்னாருக்கு அத்தை ஆவார்கள். சாக்கி சாஹிப் அவர்கள் 1958 முதல் 1968 வரை 10 வருடங்கள் செகரட்டரி மாலாகவும், காயித் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆகவும் தக்த் ஹஸாராவில் தொண்டாற்றும் வாய்ப்பு பெற்றார். இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு பிறகு தக்த் ஹஸாராவில் குடி பெயர்ந்தார்கள். அதன் பிறகு 1968 ஆம் ஆண்டு இந்த ஜமாஅத்தின் அமீராக நியமிக்கப்பட்டார்கள். 1974 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை அமீராக தொண்டாற்றி வந்தார்கள்.

1974 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் தேதி தக்த் ஹஸாரா ஜமாஅத்தில் அஹ்மதியல்லாத தீய மக்கள் ஒரு குழுவா ஒன்று சேர்ந்து அக்கம்பக்கத்தில் உள்ள அஹ்மதிய்யத்தின் எதிரிகளை ஒன்றுசேர்த்து பெரும் கூட்டமாக ஒன்றிணைந்து அஹ்மதிகளுக்கு எதிராக குழப்பத்தை உருவாக்கினார்கள். பள்ளிவாசலின் ஒரு பகுதியை தீயிட்டுக் கொளுத்தினார்கள். அதில் ஆக்கிரமிப்பு செய்தார்கள். விருந்தினர்களை உபசரிக்கக்கூடிய பகுதிகளை முழுவதுமாக எரித்து விட்டார்கள். மர்ஹூமுடைய மளிகை கடை ஒன்று இருந்தது. அதையும் கொள்ளையடித்து தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

அதேபோன்று ஒரு துணிக்கடை இருந்தது. அதையும் ஆக்கிரமித்தார்கள். வீடுகளையும் தீயிட்டுக் கொளுத்தினார்கள். அப்பொழுது இவரும் உள்ளேதான் இருந்தார். புகையின் காரணமாக மயக்கமுற்று விட்டார்கள். மயக்கமுற்ற நிலையிலேயே தீயவர்கள் இவரை பள்ளிவாசலுக்கு தூக்கி சென்றார்கள்.

பிற அஹ்மதிகளும் ஜமாஅத்தை விட்டு விலகிவிட வேண்டும் என்று, ஒலிப்பெருக்கியில் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். தவ்பா செய்து விட்டேன் என்று அறிவித்தார்கள். எவ்வாறிருந்தபோதிலும் இவருக்கு நினைவு திரும்பியபோது இவர்களைச் சுற்றி ஈட்டிகளும், அம்புகளும் சூழ்ந்திருப்பதைக் கண்டார்கள். இவருடைய சிந்தனையில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பிறகு அங்கிருந்து இவரது பிள்ளைகள் இவரை அழைத்து வந்தார்கள் லாஹூரில் ஒரு நண்பருடைய வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அங்கு இவருக்கு சிகிச்சை நடைபெற்றது. லாஹூரிலேயே ஒரு ஜமாஅத்தில் இவர் மீண்டும் குடி அமர்ந்தார்கள். வியாபாரத்தை ஆரம்பித்தார்கள். தனது அன்பருடைய வீட்டை ஒட்டியிருந்த ஒரு பகுதியை தொழுகை சென்டராக ஆக்கினார்கள். ஜமாஅத்தாக தொழுவதின் பக்கம் கவனமூட்டினாடிரகள். எண்ணற்ற குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

பிறகு நவம்பர் 2000 ஆம் ஆண்டு ஹிஜ்ரத் செய்து லண்டன் வந்து விட்டார்கள். அதன் பிறகு 2020 ஆம் ஆண்டு வரை யூ.கே நேஷனல் ஜெனரல் செக்கரட்டரி ஆபீஸில் தன்னார்வலராக முறையாக தொண்டு செய்து வந்தார்கள். மேலும் வாழ்வை அர்ப்பணித்தவரை விட அதிகமாக நேரத்தை பேணக் கூடியவர்களாக இருந்தார்கள். யாரும் காத்திருக்கக்கூடாது என்பதற்காக அலுவலகத்திற்கு முதலிலேயே வந்து விடுவார்கள். சில சமயங்களில் அலுவலகத்திற்கு வருவதற்கு முன்பு காலை உணவு ஆயத்தமாகவில்லை என்றால் காலை உணவு உண்ணாமலேயே வந்துவிடுவார்கள்.

மேலும் அவர்களிடத்தில் காணப்பட்ட இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், அவர்களுடைய பிள்ளைகள் எழுதி இருக்கிறார்கள். தினந்தோறும் மூன்று பாகம் திருக்குர்ஆனை திலாவத் செய்து வந்தார்கள். கிலாஃபத்துடன் பெரும் நேசமும் அன்பும் இருந்தது. குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் எப்பொழுதும் கண்ணியம் செலுத்துமாறும், முழுமையான விசுவாசத்துடன் கட்டுப்படுவதன் பக்கமும் மிக வேதனையுடன் அறிவுரை செய்து வந்தார்கள். வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கும், குறிப்பாக முரப்பிகளுக்கு கண்ணியம் அளித்து வந்தார்கள். மேலும் அவர்களை நேசிக்கக் கூடியவர்களாக திகழ்ந்தார்கள். ஏறக்குறைய 60 ஆண்டகளை விட அதிகமான காலம் தன்னார்வலராக, மார்க்கத் தொண்டாற்றும் நற்பேற்றை பெற்றார்கள்.

இவருடைய மகன் காலித் மஹ்மூத் சாஹிப் அவர்கள் கூலிரோட்ஸில் ஜமாஅத்தின் தலைவராகவும் இருக்கிறார். தமக்குப் பின்னால் மனைவி, 2 மகன்கள் மற்றும் 5 பெண் பிள்ளைகளை நினைவாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அவர்களுடைய சந்ததிகளையும் அவர்களுடைய நல்ல விருப்பங்களை நிறைவேற்றக் கூடியவர்களாக ஆக்குவானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய சயீத் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். இவர் நம்முடைய தனிச்செயலர் அலுவலகத்தில் Dispatch துறையில் தன்னார்வலராக தொண்டாற்றி வந்தார்கள். ஏப்ரல் 12 ஆம் தேதி 90 ஆவது வயதில் வஃபாத்தானார்கள். இரண்டு மகன்களையும் இரண்டு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூம் அவர்களின் குழந்தைப் பருவம் காதியானில் கழிந்தது. ஆரம்பக் கல்வியையும் அங்குதான் கற்றார்கள். நீண்ட காலமாக இங்கு தனிச்செயலர் அலுவலகத்தில் Dispatch ல் தன்னார்வலராக தொண்டாற்றக்கூடிய வாய்ப்பு பெற்றார்கள். மிகவும் நன்கு படித்த நண்பராக திகழ்ந்தார்கள்.

உலக கல்வியுடன் திருக்குர்ஆன் மற்றும் ஜமாஅத்தின் விவகாரங்களை பற்றியும் நன்கு அறிவு இருந்தது. தொழுகைகளை முறையாக பேணக்கூடியவராகவும், கிலாஃபத்தின் நேசராகவும் திகழ்ந்தார்கள். மிகவும் பணிவானவராகவும், நல்லவராகவும், ஒரு முன்மாதிரியாகவும் திகழ்ந்தார்கள். தமது வட்டாரத்தில் மிகவும் அன்பிற்குரியவராக திகழ்ந்தார்கள். நான் அவரை சந்திக்கும்போதெல்லாம் மிக்க பணிவுடன் சந்திப்பார்கள். மேலும் மிக வேதனை கொண்டவராகத் திகழ்ந்தார். அவர்களுடைய சந்ததிகளையும் அவ்வாறே ஜமாஅத்துடன் தொடர்புடையவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக.

அஸ்லம் கான் சாஹிப் எழுதுகிறார்: சிறப்பான அறிஞராக திகழ்ந்தார்கள். பெரும்பாலும் மதிய உணவின்போது பல்வேறு தலைப்புகளைப் பற்றி விரிவாக பேசுவார்கள். குறிப்பாக கிறிஸ்தவத்தைப் பற்றியும் யூத மதத்தைப் பற்றியும் ஆழிய ஞானம் இருந்தது.

நம்முடைய அலுவலகத்தின் ஊழியர் பஷீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: கடைசிக்காலத்தில் ஜமாஅத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்று முயற்சி செய்து வந்தார்கள். ஒரு முறை ஒரு வேலை விஷயமாக பள்ளிவாசலுக்கு வந்து கொண்டிருந்தார். மயங்கி கீழே விழுந்து விட்டார்கள். அடிபட்டு விட்டது. நீண்ட தூரத்திலிருந்து நடந்துதான் வருவார். ஆயினும் அவர்கள் அலுவலகத்திற்கு வந்தார்கள். தன்னுடைய தொண்டு செய்யும் வாய்ப்பு கையை விட்டு சென்று விடக்கூடாது என்பதற்காக வந்தார்கள். தன்னுடைய பெரிய வீட்டை விற்று பள்ளிக்கு வந்து செல்வதற்கு எளிதாக இருக்கும் வகையில் பள்ளிக்கு அருகிலேயே Flat வாங்கினார்கள். அல்லாஹ் மர்ஹூமை மன்னிப்பானாக. கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அவருடைய சந்ததிகள் ஹக்கிலும் அவர்களுடைய துஆக்களை ஏற்றுக் கொள்வானாக.

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது)

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 10 Sep 2020 Issue No. 37

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

## பள்ளிவாசல்களை கிளர்ச்சி மற்றும் குழப்பத்திற்கான அடித்தளமாக உருவாக்குவதென்பது எப்படிப்பட்ட ஒரு அபாயத்திற்குரிய கொடுமை என்றால் இஸ்லாம் எந்நிலையிலும் அதற்கு அனுமதி வழங்கவில்லை

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கீழ்வரும் வசனத்திற்கு விளக்கம் அளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

لَهُمْ فِي الدُّنْيَا خِزْيٌ وَّلَهُمْ فِي الْاٰخِرَةِ عَذَابٌ عَظِيْمٌ

அவர்களக்கு இவ்வுலகில் இழிவு உள்ளது. மறுமையிலும் அவர்களுக்குப் பெருந் தண்டனை உள்ளது. (2:115)

இறைவன் கூறுகின்றான்: இவர்கள் நம்முடைய இல்லமான பள்ளிவாசலை பாழக்க விரும்பினார்கள். அதனால் நாமும் அவர்களின் வீட்டை பாழாக்குவோம். இவர்கள் இவ்வுலகிலும் இழிவடையவார்கள். மறுமையிலும் அவர்களுக்கு பெருந் தண்டனை உள்ளது. ஏனென்றால் சுவர்க்கம் அல்லாஹ்வின் வீடாகும். அதனுடைய நிகழாக பள்ளிவாசல் திகழகிறது.

இவர்கள் பள்ளிவாசல்களை பாழக்கிவிட்ட காரணத்தினால் அவர்களுக்கு மறு உலகில் எவ்வாறு அமைதி கிடைக்கும். ஆனால் இதற்கு எவர்கள் பள்ளிவாசல்களின் பாதுகாப்பில் வந்து விடுவார்களோ அவர்கள் இஸ்லாமிய கோட்பாட்டின் அடிப்படையில் உலக சட்டத்தை விட உயர்ந்தவர்களாக கருதப்படுகின்றார்கள் என்பது ஒருபோதும் அல்ல.

அல்லாஹ் சூரா தவ்பா அதிகாரம் 9 வசனம் 107,108–ல் அப்படிப்பட்ட ஒரு பிரிவினர்கள் தொடர்பாகவே இவ்வாறு கூறுகின்றான்: அப்போதைய அரசாட்சிக்கு எதிராக அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் அன்னாரின் ஜமாஅத்திற்கு எதிராக இரகசியமான முறையில் திட்டங்களை தீட்டுவதற்காக ஒரு பள்ளிவாயிலை உருவாக்கினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் அந்த பள்ளியில் தொழுமாறும், துஆ செய்யுமாறும் அழைத்தார்கள். ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னார் மீது இவர்ககளின் இந்த பள்ளியானது அவர்களின் நயவஞ்சகம் வெளிப்படாமல் இருப்பதற்காகவேவ உருவாக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை வெளிப்படுத்தினான்.

மேலும் இவர்கள் அனைவரும் இங்கு (இந்தப் பள்ளிவாசலில்) ஒன்றுகூடி இஸ்லாத்திற்கு எதிராக திட்டங்கள் தீட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அதன் மூலம் முஸ்லிம்களையும் அழிக்க வேண்டும் என்ற அவர்களின் திட்டத்தையும் அல்லாஹ் அன்னாருக்கு அறிவித்து விட்டான். ஆதலால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த பள்ளிவாசலை இடித்து விட்டார்கள். மேலும் அந்த இடத்தை உரத்தின் கிடங்காக ஆக்கினார்கள்.

ஆக பள்ளிவாசல் என்ற நிலையில் எந்த ஒரு குற்றவாளியும் அதிலிருந்து தப்பிச் செல்லவே முடியாது. பள்ளிவாயிலில் எவராவது தவறான செயல் செய்தால் அவர் தவறானவராகவே கருதப்படுவார். அதேபோன்று ஒருவர் நல்ல செயல் செய்தால் அவர் நல்லவர் என்றே கருதப்படுவார்.

ஆக பள்ளிவாசல்கள் ஒரு புறம் இருக்கட்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புனித கஃபா தொடர்பாக இவ்வாறு கூறியுள்ளார்கள்: இந்த கஃபாவில் குற்றவாளிகள், சட்டத்திற்கு எதிராக செயல்படுபவர்கள், கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றவர்கள் மற்றும் திருடி விட்டு ஓடிச் சென்றவர்களுக்கு அடைக்கலம் தரப்பட மாட்டாது. மாறாக, அப்படிப்பட்டவர்கள் அழிக்கப்படுவார்கள். மேலும் அவர்கள் பிடிக்கப்பட்டு சட்டத்திடம் ஒப்படைக்கப்படுவார்கள்.

மக்கா வெற்றியின்போது இப்னு அக்தல் என்ற ஒரு நபரை கொலை செய்யும்படி கட்டளையிட்டிருந்தார்கள். அவன் கஃபாவில் உள்ள திரையை பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருப்பதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு செய்தி கிடைத்ததும் அவனை அங்கேயே கொலை செய்து விடுங்கள் என்று அன்னார் கட்டளையிட்டார்கள். அவ்வாறே அவன் கொலை செய்யப்பட்டான்.

(ஸீரத் ஹல்பியா தொகுதி 3 பக்கம் 93)

சில குற்றவாளிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே புனித இல்லமான கஃபாவில் கொலை செய்வதற்கான கட்டளையை பிறப்பித்துள்ளார்கள். அவ்வாறிருக்கும்போது பிற பள்ளிவாசல்களில் எங்கு சட்ட விரோதமான செயல் புரிபவர்களை சட்டத்தை விட உயர்வாக எண்ணுவதற்கு என்ன தகுதி இருக்கின்றது. பள்ளிவாசல்கள் இறையச்சத்தை நிலைநாட்டுவதற்காகவே நிறுவப்பட்டுள்ளது. சட்ட விரோத செயல்களுக்காக அல்ல. பள்ளிவாசலும் சட்ட விரோதிகளின் கூடாராமாக ஆகிவிடும் என்றால் பிறகு ஷய்த்தானிற்கான எந்த வீடும் மூடப்பட்டு இருக்காது.

எந்த இல்லங்களை எல்லாம் வல்ல இறைவன் அமைதிக்காகவும், மன நிறைவிற்காகவும், ஆன்மீக முன்னேற்றத்திற்காகவும், இறையச்சத்தை நிலைநாட்டுவதற்காகவும், ஒருவர் மற்றொருவருக்கிடையில் பரஸ்பர ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்காகவும், ஒருவருக்கொருவர் உதவி புரிவதற்காகவும் உருவாக்கியுள்ளார்களோ அந்த இல்லங்களை முஸ்லிம்களுக்கிடையில் குழப்பம் ஏற்படுவதற்கான வழிமுறையாக ஆக்குவதோ அல்லது அந்த இல்லங்களை அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சியை உருவாக்குவதற்கான வழிமுயையாக ஆக்குவதோ அல்லது அந்த இல்லங்களை கிளர்ச்சி மற்றும் குழப்பத்திற்கான அடித்தளமாக உருவாக்குவதென்பது எப்படிப்பட்ட ஒரு அபாயத்திற்குரிய அநீதி என்றால் இஸ்லாம் எந்நிலையிலும் ஒருபோதும் அதற்கு அனுமதி வழங்கியதில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 133,134 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

எல்லோரிடத்தும் அன்பு;
எவரிடத்தும் இல்லை வெறுப்பு

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad